இனிய

# நந்தவனம்

உலகத் தமிழர்களிடையே உலாவரும்
மக்கள் மேம்பாட்டு மாத இதழ்

மே 2008 ரூ. 5.00



## உழைப்பை நம்பும் ஒவ்வொரு இளைஞனும் ஒரு அம்பானியே...

இளம் தொழிலதிபர் எஸ். செந்தில்குமார்

இனிக்க! மணக்க! சுவைக்க!

# அர்ச்சனா

✆ 2703348



# Archana

## *Sweets & Cafe*

9,W.B. ரோடு, திருச்சி - 620 002.

சந்தா அல்லது நன்கொடை அனுப்பி உதவலாமே!

ஆசிரியர்
த. சந்திரசேகரன்

இணையாசிரியர்கள்
தன்னம்பிக்கை லெனா
சி. சங்கீதா

துணையாசிரியர்
எஸ். செந்தில்குமார்

சிறப்பாசிரியர்
ம. திருவள்ளுவர்

ஆலோசகர்கள்
புலவர். தியாகசாந்தன்
என்.எஸ்.பிரபு, நோர்வே

சட்ட ஆலோசகர்
வழக்கறிஞர். மு. சித்ரா, B.A., B.L.,

நிழல்படக் கலைஞர்
விஜயகுமார்

ஆலோசனைக் குழு
வண்ணை தெய்வம், பிரான்ஸ்.
அந்தனி ஜீவா, இலங்கை.
ஸ்ரீ கந்தராசா, ஆஸ்திரேலியா.
ந. பச்சைபாலன், மலேசியா.
சிங்கை தமிழ்ச்செல்வம், சிங்கப்பூர்.
வேலணையூர் பொன்னண்ணா, டென்மார்க்.
கல்லாறு சதீஷ், சுவிட்சர்லாந்து.
சிவசுப்பிரமணியன், சீசல்.
தம்பி புவனேந்திரன், ஜெர்மனி.
மாத்தளை சோமு, ஆஸ்திரேலியா.

நிருபர்கள்
கவிஞர் ஏகலைவன், சேலம்.
கரு. மணிவேல், அரியலூர்.

அனைத்துத் தொடர்புக்கும்
**இனிய நந்தவனம்**
எண்.5. புதுத்தெரு, CSI மருத்துவமனை எதிரில்,
உறையூர், திருச்சி - 620 003.

**INIYA NANDAVANAM**
5, New Street, Opp. CSI Hospital,
Woraiyur, Trichy - 620 003. Tamil Nadu, South India.

ஆசிரியர் : 94432 - 84823
இணையாசிரியர் : 98431 - 91648

## நுழைவாயில்...

கொடி : 5 மலர் : 8

கோடை காலம் என்றாலே வெயிலின் தாக்கம் தான் அதிகமாக இருக்கும். ஆனால், இந்த வருடம் வெயிலைவிட அதிகமாக வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கிறது விலைவாசி உயர்வு.

அத்தியாவசியப் பொருட்கள் ஆடம்பரப் பொருட்கள் என்று வித்தியாசம் இல்லாமல், எல்லா பொருட்களும் விலையேறி விட்டது. அத்தியாவசியப் பொருட்களான உணவுப் பொருட்களின் விலையேற்றம்தான் இன்று மக்களை அதிகமாக பாதித்திருக்கிறது. இந்த விலையேற்றம் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை நசித்துக் கொண்டு இருக்கிறது.

இன்று கணினித்துறையும், அதைச் சார்ந்த தொழில்த்துறையும் வளர்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. நல்ல வருமானம் தரக்கூடிய தொழில் துறையாகவும் வளர்ந்துள்ளது. ஆனால் இன்னும் நாம் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்கள் என்ற கணக்கெடுப்பிலிருந்து மாறாமல் இருக்கிறோம்.

ஊருக்கே உணவளிக்கும் விவசாயிகளின் நிலையோ இன்று பரிதாபத்திற்குரியதாக மாறி விட்டது. தாங்கள் விலைவித்தப் பொருட்களுக்கு தங்களால் விலை நிர்ணயம் செய்ய முடியாமலும், விளைவித்தப் பொருட்களை உடனே விற்றுப் பணமாக்க முடியாத சூழலும் இருப்பதால் விவசாயிகள் உற்பத்தி செய்வதையும் குறைத்து விட்டு, கூலித் தொழிலாளர்களாக நகரம் நோக்கி நகர்கிறார்கள்.



email : nandavanam04@rediffmail.com

இன்னொருபுறம் ஆன் லைன் என்று சொல்லக் கூடிய ஊகை வணிகம் மூலம் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை குறைந்த விலைக்கு வாங்கி தினமும் ஒரு விலை வைத்து மொத்தக் கொள்முதல் வியாபாரிகள் தான் அதிக இலாபம் பெறுகின்றனர்.

காடு வெளஞ்சென்ன மச்சான், நமக்கு கையும் காளுந்தானே மிச்சம் என்ற நிலையில் தான் விவசாயிகள் இன்றும் இருக்கிறார்கள். உலகப் பணக்காரர்கள் வரிசையில் நான்கு இந்தியர்கள் இருப்பதாக புள்ளி விபரம் கூறுகின்றன. இது பெருமைப்படக்கூடியதுதான். என்றாலும் இன்னும் இங்கே ஏழை மக்களின் வாழ்க்கைத்தரம் உயராத சூழலில்தான் இருந்து வருகிறோம். வாக்குச் சீட்டை மையமாக வைத்து இலவசங்கள் வழங்குவதையும், அதை வாங்குவதற்காக காத்திருப்பது என்பதையும் மாற்றிக்கொண்டு மக்களின் வாழ்வாதாரத்திற்கான தேவை என்ன? என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இன்று மக்கள் விழிபிதுங்கி நிற்கும் விலையேற்றத்திற்கு உடனடி தீர்வு காண வேண்டும். இதுதான் இப்போது பெரும்பான்மையான மக்களின் ஒருமித்த குரலாக இருக்கிறது. நமது மத்திய, மாநில அரசுகள் இதில் அதிகமான அக்கறை செலுத்த வேண்டும் என்பதையும் எமது வேண்டுகோளாக முன்வைக்கிறோம்.– ஆசிரியர்

**நந்தவனம் வாசகர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள் அனைவருக்கும் உழைப்பாளர் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**




## கல்விச் சிறப்பிதழ்

கல்வி மேம்பாடு பற்றிய கட்டுரைகள், மாணவர்களின் கல்வித்திறன் வளர்க்க ஆலோசனைகள், தாங்கள் பயின்ற பள்ளி கல்லூரிகளில் நடந்த மறக்க முடியாத அனுபவங்கள், பனிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் அடுத்து என்ன படிக்கலாம் என்ற ஆலோசனைகள், கல்வித்துறையில் என்னென்ன மாற்றங்கள் வேண்டும் என்பது பற்றிய...

**உங்களது படைப்பாக்கங்களை 20-05-2008க்குள் அனுப்பி வைக்கவும்.**

விளம்பரங்களையும் வரவேற்கிறோம்.

– ஆர்.



திறமை இருப்பவனுக்கு வறுமை ஒருபோதும் தடையல்ல.

## கோல்டு ஈகிள் ஹோம் அப்ளையன்சஸ் (பி) லிட்.,
## இனிய நந்தவனம் (மாத இதழ்) இணைந்து வழங்கும்

### சுயமுன்னேற்ற வருமான வாய்ப்பிற்கான அழைப்பிதழ்

நாள் : **11 - 05 - 2008 ஞாயிறு**

நேரம் : **மாலை 3.00 மணியளவில்**

இடம் : **கோல்டு ஈகிள் சர்வீஸ் பாயிண்ட்**

ஜவஹர் பஜார்ரோடு, (லெட்சுமி ஜுவல்லரி மாடியில்) கரூர்.

வரவேற்புரை : **A. ஜாகீர் ஹுசைன்,** கோல்டு ஈகிள், கரூர்.

தலைமை : **S. செந்தில்குமார்**
கோல்டு ஈகிள் ஹோம் அப்ளையன்சஸ் (பி) லிட்.,

முன்னிலை : **A. பழனிச்சாமி,** பெட்டவாய்த்தலை.
**P. வெங்கடேஷ்,** குளித்தலை.
**K.Na. பழனியப்பன்,** திருச்சி.
**M. சுஜாதா,** கரூர்.
**R. நாட்ராயன்,** வேடச்சந்தூர்.
**M. சாந்திமுருகானந்தம்,** மதுரை.
**செல்வி. திலகவதி,** மதுரை.
**F. கலீல்ரஹ்மான்,** கரூர்.

வாழ்த்துரை : **T. சாமிநாதன்**
மேலாளர் - கோல்டு ஈகிள் ஹோம் அப்யைளசன்ஸ் (பி) லிட்.,

சிறப்புரை : **தங்கவேல்மாரிமுத்து**
சுயமுன்னேற்ற பயிற்சியாளர்.

ஏற்புரை : **நந்தவனம் சந்திரசேகரன்**
ஆசிரியர் - இனிய நந்தவனம்.

நன்றியுரை : **S. கபில்குமார்,** மோகனூர்.



துணிந்து போராடு, துயரங்கள் விலகி ஓடும்.

# வெற்றியைக் கொண்டாடுவோம்

மிகவும் வாட்டத்துடன் இருந்தான் அந்த இளைஞன். அவன் தோல்வியால் துவண்டிருந்தான். மனதில் வேதனை, தளர்ந்த உடலிலும் தெரிந்தது அவனுக்கு ஏற்பட்டிருக்கும் வருத்தத்திற்குக் காரணம். ஏதோ ஏமாற்றந்தான் என்பதை ஞானி புரிந்து கொண்டார்.

என்ன விசயம்? ஏன் வருத்தம்? அவனிடம் ஞானி கேட்டார். ''எனக்கு அடிக்கடி தோல்வி ஏற்படுகிறது. மனதில் வேதனை படர்கிறது வாழ்கையிலே வெறுப்பு ஏற்பட்டு வருகிறது'' என்றான் இளைஞன்.

நீ தோல்வி அடைந்தததாக நினைக்கிறாயே அதற்கு பெயர் தோல்வியல்ல''அப்படி என்றால்? அதை தோல்வி என்று எண்ணாதே! நீ அப்போதைக்கு வெற்றி பெறவில்லை என்று நினைத்துக் கொள்.''

ஆனால் அது அவமானமல்லவா?.

இல்லை. நீ மீண்டும் நன்கு உழைத்து தோல்வியை புறந்தள்ளவேண்டும் என்று உனக்கு விடுக்கப்பட்டுள்ள சவால்.

''தோல்வியால் என் வாழ்க்கையே பாழாகிவிட்டதாக நான் நினைக்கிறேன்''.

தவறு. அப்படி நினைக்காதே. ஒரு தோல்வியுடன் உன் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை. உனக்கு அவற்றைப் பெற சந்தர்ப்பங்கள் உண்டு என்பதை நீ உணர்வதற்காகத்தான் உன் வாழ்க்கை நீடிக்கிறது.

''அப்படியா?''

''ஆமாம். தோல்வி என்றால் நீ முயற்சியை அப்படியே விட்டுவிடவேண்டும் என்று அர்த்தமல்ல. இன்னமும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் என்று உனக்கு கிடைத்திருக்கும் ஊக்கம் தான் அது.

இளைஞனுக்கு தெளிவு வந்தது. அது அவனுடைய மலர்ந்த முகத்திலும் உடல் முறுக்கிலும் தெரிந்தது.

அந்த இளைஞனுக்கு மட்டுமல்ல நமக்கும் அந்த தெளிவும் முறுக்கும் வரவேண்டும்.

நண்பர்களே! தோல்விகளுக்காக நாம் சோர்ந்து போகாமல் அது வெற்றிக்கான படிக்கட்டு என்றே எண்ணவேண்டும் இன்று உலகில் வெற்றியாளர்களாய் நாம் பார்க்கிற ஒவ்வொரு வெற்றியாளர்களின் பின்னாலும் நிறைய தோல்விகள் இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஒரு துறைமுகத்தில் சாதாரண அலுவலக எழுத்தராக வேலை பார்த்தவர்தான் கணித மேதை ராமானுஜம். அவர் ஏதாவது எழுத வேண்டும் என்று நினைக்கும் போது எழுதுவதற்கு பேப்பர் வாங்ககூட பணம் இல்லை. அலுவலகத்திற்கு பார்சல் சுற்றி வந்த பேப்பர்களில் கணித சமன்பாடுகளை போட்டு சாதனை செய்தவர்தான் இராமானுஜம்.

பேப்பர் வாங்கக் கூட பணம் இல்லையே என்று அவர் சோர்ந்து விடாமல் முயற்சியை கைவிடாமல் கிடைக்கின்ற வாய்ப்புகளை பயன்படுத்தி மன உறுதியுடன் போராடிய தால்தான் இன்று விடைகள் கண்டுபிடிக்கப் படாத கணித புதிர்களுக்கு விடைகண்டு

உலகிற்கு அளித்த மேதை என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இதை எல்லாம் பேசுவதற்கும் எழுது வதற்கும் சரிபட்டு வரலாம். நடைமுறைக்கு சாத்தியப்படுமா? எல்லோரும் கணித மேதை ஆகிவிடமுடியுமா? என்று நீங்கள் கேட்கலாம். ஏன் முடியாது? எடுத்துக் கொண்ட பணியில் அல்லது செயலில் ஆத்மார்த்தமான ஈடுபாடும் முயற்சியும் இருந்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

இந்த உலகிற்கு நீங்கள் வந்துள்ளதே சாதனை படைக்கத்தான் என்ற ஆழமான எண்ணத்தை உங்களுக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏதாவது சாதனை செய்து உங்கள் பெயரை முத்திரை பதித்து விட்டுத்தான் போக வேண்டும் என்ற இலக்கை குறித்துக் கொள்ள வேண்டும்.

இலக்கு இல்லாமல் முயற்சி செய்வதும் வீண்தான்.

நான் ஏழை எனக்கு பணம் இல்லை. எனக்கு வீடு இல்லை. என்னால் எப்படி சாதிக்க முடியும்? என்ற எதிர்மறை எண்ணங்களையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு நான் வெற்றியாளன், நான் சாதனை யாளன், நான் உயர்ந்தவன் என்னால் முடியும் என்ற நேர்மறையான எண்ணங்களில் உங்களை நீங்களே ரீ சார்ஜ் செய்து கொள்ளுங்கள்.

முடியாது என்ற வார்த்தையை கூட சொல்லாமல் முயற்சி செய்வேன் என்று சொல்லிப் பழகுங்கள். நமது சூழ்நிலையால் நமக்கு நிறைய தடைகள் வரலாம். அதையும் தாங்கி மனவலிமை குறையாமல் சாதனை செய்யவேண்டும்.

"இலியட் ஒடிஸி" என்ற காவியத்தைப் படைத்த ஹோமர் பார்வை இல்லாதவர். அதுபோல மில்டன் என்ற எழுத்தாளருக்கு 44வது வயதில் ஒரு விபத்தில் இரண்டு கண்களிலும் பார்வை போய்விட்டது. அதற்கு பிறகு அவர் எழுதிய காவியம்தான் "மீண்ட சொர்க்கம்", "இழந்த சொர்க்கம்". "சாம்சன் அக்னைஸ்ட்" போன்றவை.



எனவே சூழ்நிலையை குறைகூறாமல் சூழலை தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்பவனே வெற்றியாளன் என்பது போல, நமது வெற்றியும் தோல்வியும் நமது கையில்தான் இருக்கிறது நண்பர்களே.

நான் இங்கிலாந்து மீது ஆறு தடவை படையெடுத்தேன், தோல்வியடைந்தேன். ஓடி ஒரு குகையில் ஒழிந்து கொண்டேன். அங்கே ஒரு சிலந்தி வலை பின்னத் தொடங்கியது. ஆறு முறை அதனால் முடியவில்லை. ஏழாவது முறை முயன்று வென்றது. நானும் பாடம் கற்றேன் படைகளை திரட்டிப் போர் தொடுத்தேன், வென்றேன் என்று தன் வெற்றியைக் கொண்டாடுகிறார் ராபர்ட் புரூஸ்.

உங்கள் வெற்றியை கொண்டாடுவது எப்போது என்று தீர்மானித்து விட்டீர்களா? ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு கிடந்த இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பாகவே நம்பிக்கையுடன் ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என கொண்டாடினான் பாரதி. அந்த மகாகவியின் கனவு பலித்து சுதந்திர காற்றையும் சுவாசிக்கிறோம். எனவே நண்பர்களே! உங்கள் வெற்றியை கொண்டாடும் நாள் எது என்று தீர்மானியுங்கள். வெற்றி சிகரங்களில் உங்கள் பெயரும் பொறிக்கப்பட வேண்டும் என்ற உறுதியுடன் வெற்றியை வேட்டையாடப் புறப்படுங்கள். ■



உற்சாகமாய் செயல்பட்டால், எந்த வேலையையும் சரியாக செய்து முடிக்கலாம்.



நேர்காணல்

# உழைப்பை நம்பும் ஒவ்வொரு இளைஞனும் ஒரு அம்பானியே...!

என்னிடம் நூறு இளைஞர்களை கொடுங்கள் இந்த சமுதாயத்தை உயர்த்திக் காட்டுகிறேன் என்றார் சுவாமி விவேகானந்தர். அந்த நூறு இளைஞர்களில் ஒருவராய் இருக்கும் இளம் தொழில் நுட்ப அதிபர் திருச்சி கோல்ட் ஈகிள் ஹோம்அப்லையன்சஸ்(பி) லிட் நிறுவனத்தின் உரிமையாளர் எஸ். செந்தில்குமார் அவர்களுடன் ஒரு இனிய வேலையில் நந்தவனத்திற்காக சந்தித்தோம். சொல்லுங்க தலைவரே! என்று நேரில் சந்திக்கும் போதும் சரி, தொலைபேசியில் பேசும்போதும் சரி மற்றவர்களை மரியாதையுள்ள மனிதராய் மதித்து, எந்தவிதமான மிகைப்படுத்தலும் இல்லாமல் இயல்பாக பேசி ,தானும் உயர வேண்டும் இந்த சமுதாயமும் உயர வேண்டும் என்ற உயர்வான நோக்கத்தோடு எப்போதும் சிரித்த முகத்தோடு வரவேற்கும் செந்தில் குமார் அவர்களிடம் முதலில் அவரின் நிறுவனம் பற்றி கேட்டோம்.

எங்கள் நிறுவனம் கோல்ட் ஈகிள் ஹோம் அப்ளையன்ஸ் (பி) லிட், முறையாக சான்றிதழ்களுடன் ஆரம்பித்த நிறுவனம். உலக தரச் சான்றிதழான I.S.O. 9001 2006 பெற்று வீட்டு உபயோகப் பொருட்களை மார்க்கெட்டிங் செய்து வருகிறோம். விரைவில் மூன்றாம் ஆண்டைத் தொடப் போகிற நிறுவனம். இதில் ஆயிரக்கணக்கான நபர்கள் இணைந்து பயன்பெற்று வருகிறார்கள்.



முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். கட்டளையிடும் காலம் தன்னால் வரும்.

*✦ எப்படி இந்தத் துறைக்கு வந்தீர்கள்?*

இந்த வர்த்தக முறையை நான் 2001 ல் இருந்து செய்து வருகிறேன். அதற்கு முன்பு நிறைய Traditional Business செய்துள்ளேன். நான் அரசாங்க வேலையை எதிர்பார்த்து இருந்ததே இல்லை. என்னால் பல பேருக்கு வேலை வாய்ப்பும். நிறைய குடும்பங்களை வாழ வைக்க வேண்டும் என்று என் மனதில் படிக்கும் காலம் தொட்டு இருந்து வந்தது. அதற்கு என்ன செய்ய வேண்டும்? எப்படி அனைவருக்கும் வருமான வாய்ப்பு கொடுப்பது என்ற எண்ணம் என் அடி மனதில் அவ்வப்போது ஒரு கேள்விக்குறியாக இருந்து வந்தது. 2001-ல் இதற்கான வழி மல்டி லெவல் மார்க்கெட்டிங்தான் என முடிவு செய்தேன். மேலை நாடுகளில் இந்த வர்த்தக முறையில் அனைவரும் பயனடைந்துள்ளனர் என அறிந்தேன். அது சம்பந்தமான புத்தகங்களை நிறைய படித்தேன். ஒரு சில நிறுவனங்களில் இணைந்து எது செய்யலாம், எது செய்யக்கூடாது என்பதை நன்கு அறிந்தேன். பின்னர் நாமே ஆரம்பித்து நாம் நிறைய பேருக்கு வருமான வாய்ப்பு கொடுத்தால் என்ன என நினைத்து இத்துறைக்கு வந்தேன்.

*✦ நீங்கள் எதிர்பார்த்த அளவிற்கு நல்ல வரவேற்பு கிடைத்ததா?*

ஆரம்பித்த நாட்களில் மக்களுக்கு இந்த வியாபார முறை பற்றி அதிக அளவில் தெரியாமல் இருந்ததால் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. பின்னர் நாளடைவில் மக்களிடையே ஒரு விழிப்புணர்வு வந்து எது நல்ல நிறுவனம், எவை நல்ல பொருட்கள் என அறிந்து இணையும் அளவுக்கு வந்துவிட்டனர். அதற்கு நம் நிறுவனமே சான்று. வருமானம் உழைப்புக்





நல்லோர் நட்பு நன்மையையே தரும்.

கேற்ற அளவில் வருவதால் நல்ல வரவேற்பு கிடைத்தது.

✦ *MLM தொழில் என்பது பெரிதாக வரவேற்பு இல்லாத நிலையில் நீங்கள் எப்படி தேர்ந்து எடுத்தீர்கள்?*

நீங்கள் சொல்வது தவறு. இன்று இந்த முறையில் வருமானம் ஈட்டி லட்சக்கணக்கான குடும்பங்கள் வறுமை நீங்கி வாழ்ந்து வருகின்றனர். இதற்கு நிறைய நபர்களை என்னால் உதாரணமாக கூற முடியும். இதை அறிந்த பின்னர்தான், ஏன் அனைத்து குடும்பங்களும் வசதி படைத்த மேலை நாடுகள் மாதிரி மாறக்கூடாது என்ற எண்ணத்தில் தான் இத்தொழிலை தேர்ந்தெடுத்தேன்.

✦ *இத்தொழில் இன்னும் இங்கே முழுமையாக வெற்றியடைய வில்லையே ஏன்?*

அதற்கு அரசாங்கம் தான் பதில் கூற வேண்டும். இந்த வர்த்தக முறையினை அரசாங்கம் ஒரு வரை முறைப்படுத்தி, சில கட்டுப்பாடுகளை கொண்டு வந்தால் அனுபவம் இல்லாமல் தோன்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை குறையும். மக்களுக்கு எந்த நிறுவனத்தில் சேரலாம் என்ற நம்பிக்கை பிறக்கும். இவை நடந்தால் முன்னால் ஜனாதிபதி கூறியது மாதிரி 2020ல் இந்தியா வல்லரசுதான்.

✦ *எதிர் காலத்தில் இதற்கான வரவேற்பு எப்படி இருக்கும்?*

மேற்கூறிய கேள்விக்கு பதில் தான் இந்த கேள்விக்கும். வேலையில்லா திண்டாட்டம் குறைந்து இந்தியா வறுமை கோட்டிலிருந்து விடுபடும்.

✦ *MLM தொழிலில் ஈடுபட இன்னும் ஒருவித தயக்கம் இருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து?*

வளர்ந்த நிறுவனங்கள் அவர்கள் ஆரம்பிக்கும்போது எவ்வாறு திறம்பட நடத்த வேண்டும் என நினைக்கின்றனரோ, அது போகப் போகக் குறைவதே மக்களுடைய தயக்கத்திற்குக் காரணம். இதைத் தான் அரசு ஒரு வரைமுறைக்குக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று கூறினேன்.

✦ *மற்ற தொழிலைப்போல் இதில் ஈடுபடுபவர்களுக்கு வாழ்க்கைக்கான உத்திரவாதம் இருக்கிறதா?*

மற்ற தொழில்களைப் போல் இதிலும் வாழ்க்கைக்கு உத்திரவாதம் கொடுக்கமுடியும். மாத வருமானம் போல் இல்லாமல் இதில் அவரவர் உழைப்புக்கேற்றவாறு வருமானம் கிடைக்கும். அதனை பலவாறு முதலீடு செய்தால் அவர்கள் வாழ்க்கைக்கும், அவர்கள் தலை முறைக்கும் கூட பயனளிக்கும்.

✦ *இதே போல் நிறைய வாய்ப்புகள் இருந்தும் வெற்றியடைய முடியாமல் இருக்கும் இளைஞர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?*

சரியான கேள்வி. இது என் மனதில் அவ்வப்போது எழும் கேள்வி. நமது இனிய நந்தவனம் புத்தகத்தில் நான் எழுதும் "மன உளைச்சலில் எனது எதிர்கால



சலிப்பின்றி உழைத்தலே சிகரங்களைத் தொட வழி.

இளைஞர்கள்'' கட்டுரையில் இன்றைய இளைஞனின் நிலைமையை சொல்லி இருப்பேன். படித்து முடித்து வெளிப்படும் இளைஞர்கள் ஏதோ ஒரு வகையில் அவர்களது முதல் முயற்சியில் தோல்வி அடைந்ததும் வாழ்க்கையே இழந்து விட்டோம் என்கிற மனநிலையில் போய் விடுகிறார்கள். இல்லை அவர்கள் படித்ததற்கான வேலை தேடியே வருடங்கள் கழித்து விடுகின்றனர். அவர்கள் படிப்புக்கான வேலை கிடைக்கும் வரை, கிடைக்கும் வேலையில் அவர்களது உழைப்பையும், விடா முயற்சியை காண்பித்தார்களே யானால் ஒவ்வொரு இளைஞனும் ஒரு அம்பானிதான்.

✦ *உங்களைப் போலவே ஒவ்வொரு இளைஞனும் வெற்றியடைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?*

இது என் வெற்றியாக நான் கருத வில்லை இது எங்களுடைய (team) வெற்றியாக கருதுகிறேன். மேலும் இந்தியா முழுவதும் இந்நிறுவனத்தை கொண்டு போவதே எங்களுடைய குறிக்கோளாகக் கொண்டுள்ளோம்.

ஒவ்வொரு இளைஞனுக்கும் நான் சொல்வது என்னவென்றால், நீங்கள் உங்களுக்குள்ளேயே ஒரு மாயையை ஏற்படுத்திக் கொண்டு, உங்களையும் உங்கள் பெற்றோர்களையும் ஏமாற்று கிறீர்கள். எந்த வேலை கிடைத்தாலும், அதை பொறுப்புடனும் கடின உழைப்புடனும் விடாமுயற்சியுடனும் செய்யுங்கள். அதிர்ஷ்ட தேவதை உங்கள் வீட்டின் கதவை தட்டுவாள்.

– சந்திப்பு : நந்தவனம் சந்திரசேகரன்


அட்மிஷன் நடைபெறுகிறது

சாதனையாளர்களின் சங்கமம்

ஆக்ஸ்போர்டு

கேட்டரிங் காலேஜ்

குறைந்த கட்டணம்
தரமான பயிற்சி
100% வேலை வாய்ப்பு

இந்திய மற்றும் தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது.

(மலேசிய ஆப்டிமா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)

புதிய பேருந்து நிலையம் (மாடியில்)

புதுக்கோட்டை - 1.

போன் : 04322 - 232299 செல் : 94431 - 12006

கடந்த வருடம் எங்களிடம் படித்த மாணவர்கள் அனைவரும் வேலை பெற உள்ளனர்




தீய மனிதனும், அன்பினால் அடங்கி நடப்பான்.

## ஓடிக்கொண்டே இருங்கள்.....

வாழ்க்கை என்பது வெறும் ஜாலியாகவே உருவாக்கப்பட்டது என்பது இன்றைய பலரின் நினைப்பாகும். வாழ்க்கையில் ஜாலி என்பது ஒரு அம்சமாக மட்டும் இருந்தால் நிச்சயமாக வாழ்க்கையில் அத்தனை சந்தோசங்களும் தேடி வந்துவிடும். சிலருக்குத் தனது சந்தோஷம் திருப்தி என்பது வரையே போதுமானதாக இருக்கும். இப்படிப்பட்டவர்கள்தான் சகல வித தீய பழக்க வழக்கங்களில் சிக்கிக் குடும்பத்தைக் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள்.

பெரும்பாலும் போதைகளுக்கு அடிமையானவர்கள் தம் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. பின்பு பாதையைச் செப்பனிடுகிறோம் என்று கூறியும் போதைக்கு அடிமையாகின்றார்கள். காலம் பொன்னானது, கிடைக்கும் நேரம் முழுவதையும் உழைத்துப் பயன்படுத்தியும் முன்னேற்றம் காணமுடியாமல் எம்மில் பலர் தத்தளிக்கின்றனர். சிலர் ஏதோ பிறந்தோம், எப்படியோ வளர்ந்தோம், மீதி நாட்களும் ஓடிவிடும் என்கிற பட்டியலில் வாழ்கிறார்கள். வாழ்க்கையின் ஆழம் தெரியாமல் கரையிலே நின்றுகொண்டு இதுதான் ஆழமாக இருக்குமோ! என்று திருப்திப்பட்டுக் கொண்டுவிடுகிறார்கள்.

கடினமான உழைப்பாளிகளுக்கு சோர்வு என்பதே இல்லை. நமது வாழ்க்கை என்பது நமது குடும்பத்துக்கான கடமை என்பதை மனதார உணர்ந்தவர்கள் ஒருபோதும் உழைப்பதை மறப்பதில்லை. எனவே எனக்கு நாற்பது வயது முடிந்துவிட்டது. ஐம்பது வயதை நெருங்கி விட்டேன். என்னால் முன்போல் உழைக்க முடியுமா? என்று கேள்விக்குறி எழுப்புபவர்கள் கடைசி வரை உழைப்பு மீதான அவ நம்பிக்கையிலேயே எஞ்சிய நாட்களையும் கழித்து விடுகிறார்கள். எனவே உழைப்பு என்னும் ஓட்டத்தில் பணமும் கிடைக்கும், உடலில் பலமும் கிடைக்கும். ஆகவே, சுறுசுறுப்பாய் எப்போதும் ஓடிக்கொண்டே இருங்கள் வெற்றிக்கனி நாடி வரும்.

– சிவா, ஜெர்மனி. நன்றி : மண்

## கவிதைத் தொகுப்பு - 2008

நந்தவனம் வெளியீடாக சென்ற ஆண்டு 56 கவிஞர்களை ஒருங்கிணைத்து கண்ணாடிச் சித்திரங்கள் என்ற கவிதைத் தொகுபு வெளியிட்டிருந்தோம். இத்தொகுப்பு வாசகர் மத்தியிலும் கவிஞர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பு பெற்றது. அதேபோல் இந்த ஆண்டும் கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட இருக்கிறோம். இதில் நூற்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் கலந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம். உங்கள் கவிதைகளை உடனே அனுப்பி வையுங்கள்.

**விதிமுறைகள் :**

1. சமூக மேம்பாடு – முற்போக்கு கருத்துகள் அடங்கிய கவிதைகளாக அனுப்பலாம்.
2. மரபுக் கவிதை – 24 வரிகளுக்கு மிகாமலும், புதுக்கவிதை A 4 தாளில் ஒரு பக்கத்துக்கு மிகாமலும் இருக்க வேண்டும். ஹைக்கூ கவிதைகளும் அனுப்பலாம்.
3. உங்கள் மார்பளவு புகைப்படமும் சுயகுறிப்பும் அனுப்ப வேண்டும்.
4. நூல் வெளியீட்டு பங்குத்தொகையாக ரூ. 100/- T. CHANDRASEKARAN என்ற பெயரில் வரைவேலையாக (D.D) அல்லது பணவிடையாக (M.O) அனுப்ப வேண்டும். வெளிநாட்டு கவிஞர்கள் ரூ. 250/– அனுப்ப வேண்டும்.

**முகவரி : ஆசிரியர், இனிய நந்தவனம், 5-புதுத்தெரு, உறையூர்,**
**திருச்சி - 620 003. செல் : 94432 - 84823**



உலகம் ஒரு நிலைக்கண்ணாடி, நாம் நகைத்தால் அதுவும் நகைக்கும்.



# துளிப்பாவனம்

மக்கள் பெருக்கம்
மலிந்து விட்டது
மனித நேயம்...

பொன்குமார், சேலம்.

ஒட்டிய வயிறுடன்
சாலையில் வரைகிறான்
தொந்திக் கணபதி...

ம. ஞானசேகரன், புதுச்சேரி.

வேலிக்குள் அடைக்கப்பட்ட
ஆட்டு மந்தைகளாய்
முகாம்களில் அகதிகள்...

ஈழக்கவிதாசன் மா.ஞானசூரி,
அறந்தாங்கி.

இரண்டு கால்கள் கொண்ட
பேசும் மிருகம்
மனிதன்...

வே.பாலமணிகண்டன், சென்னை.

நிரம்பிக் கிடக்கிறது
மெரினா கடற்கரையில்
காதல்கள்...

கமலி வெங்கட், வெண்ணந்தூர்.

ஆறுதல் சொன்னது
நிலவு
மின்தடை....

ம. ஞானகேரன், புதுச்சேரி.

காற்று கிள்ளியதோ
இப்படி நெழிகிறது
கடல்...

ஆர்.கே.மதியழகன், கரடிப்பட்டி.

ஒவ்வொரு இலையாக இதழாக
உதிர்க்கும்
நாள்காட்டி மரம்...

இளங்கம்பன், பழனி.

அலாரம் இல்லாமலே
கண்விழித்தேன்
அவள் கொலுசொலி...

சை.ஜெய்லானி, திருச்சி.

யுத்தம் தொடர்கிறது
ரத்தச்சுவடுகளே மிச்சம்
நாளைய ஈழத்தில்...

ஈழக்கவிதாசன் மா.ஞானசூரி,
அறந்தாங்கி.

இரவில் வீடு
பகலில் அலுவலகம்
மனிதனுக்குச் சிறை...

பொன்குமார், சேலம்.

கலகலப்பாய்
ஒரு கவியரங்கம்
மழலைப்பள்ளி...

கோவை கோகுலன்.

முலாம்பூசிய
முகங்களாய்
முதலாளி வர்க்கம்...

கோவை கோகுலன்.





மனதில் படிந்து கிடக்கும் சோர்வை விரட்ட, நம்பிக்கை ஒன்றே போதும்.

# வாசிக்க... வாசிக்க... வளமை வரும்...

"வாசிக்க வாசிக்க யோசனை வரும்... யோசிக்க யோசிக்க ஐயம் வரும். ஐயம் வர வர... தேடல் தொடங்கும். தேடத்தேட.... வாய்ப்பு வரும். வாய்ப்பு வர வர... அனுபவம் பெருகும். அனுபவத்தால் பக்குவம் வரும். பக்குவத்தால் பயன்பாடு அதிகரிக்கும். பயன்படப் பயன்பட உங்களின் மதிப்பு உயரும். மதிப்பு உயர்ந்தால் வாழ்வில் இனிமை வரும். இனிமையைவிட வேறென்ன வளமை வேண்டும்! என்ன... இப்ப வாசிக்கத் தொடங்கலாமா?"

இதுவரையில்...

வளமை காண வேண்டுமெனில் "கவலை களையப்பட வேண்டும்" என்றும், கவலை களையப்படவேண்டுமெனில் "கற்பனை வளம் வேண்டும்" என்றும், கற்பனை சிறகடித்துப் பறக்கும் போது "எது வேண்டும்"என்றும், "எதைக் கேட்பது" என்றும், தீர்மானிப்பது அவசியம் என்றும், அப்படி தீர்மானிக்க "முடிவெடுக்கும் திறன் வேண்டும்" என்றும், சரியான முடிவெடுக்க "உறுதியான மனம் வேண்டும்" என்றும் உறுதியான மனமே "துணிவின் அடையாளம்" என்றும் துணிவு கொள்ள வேண்டுமெனில் தன்னைத்தானே அறிய வேண்டும் என்றும் கண்டோம்.

தன்னை அறிவது எப்படி என்றும் சிறிது கண்டோம். அதன் கூடுதல் பரிமாணத்தை இப்போது காண்போம்.

தன்னை அறிய முனையும் முதல் கேள்வி "நான் யார்" என்பதுதான். ஆதிசங்கரர் முதல் சாக்ரடிஸ் வரை, ராமானுஜம் தொடங்கி புத்தர் வரை, "நான் யார்" எனக்கேட்டுக் கொண்டவர்கள் தாம்.

நான் யார் எனக் கேட்பதன் பொருள், பலருக்கும் புரியாமல் போகலாம். மாறாக இப்படி கேட்டுக் கொண்டால் அதன் பொருள் மேலும் தெளிவாகப் புரியலாம்.

"நான் ஏன் பிறந்தேன்?" – "என் வாழ்வில் பொருள் என்ன?" – "எனது பிறவியின் நோக்கம் என்ன?".

இதைத்தான் எம்.ஜி.ஆர் பாடிய பாடல் ஒன்று தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது. ஒரு பாமரனுக்கும் புரியும் படி....

*"நான் ஏன் பிறந்தேன்*
*நாட்டுக்கு நலமென்ன புரிந்தேன்?*
*என்று நாளும் பொருளும்*
*வாழும் வகையில் நினைத்திடு என் தோழா*
*நினைத்து செயல் படு என் தோழா?"*



உடல் ஆரோக்கியம் உயர்வுகளின் ஆரம்பம்.

என்று கூறும் பாடல் பல உள்ளடக்கி மேலும் விரிகிறது...

*"மலையில் பிறந்த நதியால் மக்கள்*
*தாகம் தீர்ந்தது"*

*"மரத்தில் விளைந்த கனியால் அவன்*
*பசியும் தீர்ந்தது"*

*"கொடியில் பிறந்த மலரால் எங்கும்*
*வாசம் கமழ்ந்தது"*

*"அன்னை மடியில் பிறந்த உன்னால்*
*என்ன பயன் தான் விளைந்தது"*

இதன் விழுதாக வளர்ந்ததுதான் ஜான் எஃப் கென்னடியின் மந்திர வாசகம்

"நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே; நீ நாட்டுக்கு என்ன செய்தாய்" என்று கேட்டுக்கொள்வதே முக்கியம் என்றார் அவர்.

இது போன்ற கேள்விக்கனைகளை நம்மை நோக்கி நாமே வீசிக் கொள்வது தான் சுய தரிசனத்தை நோக்கியப் பயணத்திற்கான (முதல் சுவடுகளைத் தாங்கி நிற்கும்) ஒற்றையடிப் பாதை.

*"ஏன் என்ற கேள்வி கேட்காமல்*
*வாழ்க்கை இல்லை"*

*"நான் என்ற எண்ணம் கொண்ட*
*மனிதன் வாழ்ந்ததில்லை"*

*"பகுத்தறிவு பிறந்ததெல்லாம்*
*கேள்விகள் கேட்பதாலே"*

என்கிறது மற்றொரு பாடல்.

சிந்திப்பதும் – மீண்டும் சிந்திப்பதும் – நம் வாழ்வின் பொருளையும், பிறவியின் பயனையும் – நம்மை விரைவாக உணர்ந்து கொள்ள உதவுபவையாகும். நான் குறிப்பிடும் இந்தக் கேள்விகள் உலகத்தை நோக்கி வீசப்படுபவை அல்ல. உள்ளத்தை நோக்கி வீசப்படும் தூண்டில்கள்!



மனித உள்ளம் (மனம்) மிகவும் விசித்திரமானது. அந்த மனதை நோக்கி வீசப்படும் கேள்விகள் நமக்கான விடைகளை எளிதாகக் கொண்டு வந்து விடும். மனம் மிகவும் ஆழமானது. ஆற்றல் மிக்கது. நாம் கேட்பவையெல்லாம் வழங்கும் வல்லமை மிக்கது. ஆனால் அது அவ்வளவு சுலபமாக வெளிப்படாது.

*"உள்ளம் என்பது ஆமை*
*அதில் உண்மை என்பது ஊமை;*
*சொல்லில் வருவது பாதி*
*நெஞ்சில் தூங்கிக் கிடப்பது மீதி"*

என்னும் பாடலை உற்று நோக்குங்கள்...

தம் உள்ளத்தில் தோன்றுவதை உள்ள படி எத்தனை பேர் வெளிப்படுத்துகிறார்கள்? அப்படி வெளிப்படுத்தும் துணிவு பலருக்கு வருவதில்லை. அதனால் தயங்குபவர் பலர். சிலர்... "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும்" நிலைக்கு வந்து விடுகிறார்கள். இப்படி உள்ளும் – புறமும் வேறு வேறாக இருந்தால் வாழ்க்கை எப்படி ஒன்றாக இருக்கும்?

இதைத்தான் "ஒருவன் மனது ஒன்பதடா... அதில் ஒளிந்து கிடப்பது எண்பதடா" என்கிறது மற்றொரு பாடல்! மனதைப் பற்றி பலரும் பலவிதமாகச் சொல்லியிருக்கிறார்கள். கண்ணுக்கு தெரியாத அந்த மனம் தான் மனிதனை படாதபாடு படுத்திக் கொண்டிருக்கிறது. மற்றொரு பாடலை கவனித்தால் அது புரியும்...



மனமே உடலை ஆளும் ஆசான்.

*மனமொரு குரங்கு*
*மனித மனமொரு குரங்கு*
*அதைத் தாவ விட்டால் தப்பி ஓட*
*விட்டால்*
*நம்மை பாவத்தில் ஏற்றிவிடும்''*
உண்மைதானே...!

*''கண்போன போக்கிலே கால்*
*போகலாமா?*
*கால் போன போக்கிலே மனம்*
*போகலாமா?*
*மனம் போன போக்கிலே மனிதன்*
*போகலாமா?*
*மனிதன் போன பாதையை மறந்து*
*போகலாமா?''*

என்கிறது மற்றொரு பாடல் – மனதின் போக்கு அப்படி...!

வள்ளுவனும் பேசுவான்...

*வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர் தம்*
*உள்ளத்தனையது உயர்வு* – என்று

மனமானது உயர்ந்திருந்தால், வாழ்க்கை உயர்ந்துவிடும். மனதின் உயர்வுக்கு உதவுவதே இத்தகைய உள்ளார்ந்த கேள்விகள். மனதை உயர்த்துவதுதான் மகத்தான சொல்!

மூடிக்கிடக்கும் மனக்கதவை மெல்ல மெல்ல திறந்து கொண்டு உள் நோக்கிப் பயணிக்கும்பொழுது நான் யார்? – நான் ஏன் பிறந்திருக்கிறேன்? என் கடமைகளும் பொறுப்புகளும் என்னென்ன? என் தகுதிகளும், திறமைகளும் எவை எவை? எதிர்காலத்தில் நான் யாராக மலரப் போகிறேன்? – போன்ற வினாக்களுக்கான விடைகள் சிறிது சிறிதாக, மெல்ல மெல்ல புலப்படத் தொடங்கும்! அது மட்டுமல்ல.. தனக்குப் பிடித்தவை – பிடிக்காதவை, எது நல்லது – எது கெட்டது? என்பவையும் எளிதில் விளங்கத் தொடங்கும்.

இப்படிப்பட்ட தன்னுணர்வு பெற்ற ஒருவரால் மட்டுமே முனைப்போடு முயல முடியும். முயல்பவரால் மட்டுமே முடிவுகள் எடுக்க முடியும். முடிவுகள் எடுப்பவரால் மட்டுமே முன்னேறும் செயல்பாடுகளைத் தொடங்க முடியும். தொடங்குபவரால் மட்டுமே தொடர முடியும். தொடர்பவரால் மட்டுமே உயர முடியும். உயர்பவரால் மட்டுமே வளமையை காணமுடியும். உயிர்த்திருப்பதால் மட்டுமே உன்னதத்தைக் காணமுடியாது, உளப்பூர்வமாக ஈடுபட்டு – உழைத்து, உழைப்பில் திளைத்து... ஒவ்வொரு தினத்தையும் கொண்டாடுபவரால் மட்டுமே மேலும் புதிய உயரங்களை தொட முடியும்! உங்களாலும் அது முடியும் ! முயலுங்கள்! முன்னேறுவோம்.



தாரகை அறக்கட்டளையின் சார்பில் கவிஞர் இரா. இரவி எழுதிய இதயத்தில் ஹைக்கூ நூலிற்கு பாரதிதாசன் விருது வழங்கப்பட்டுள்ளது. விருதினை மேலாண்மை பொன்னுசாமி, கவிஞர் பொன்.குமார் ஆகியோர் வழங்கினர். உடன் கவிஞர் வெண்மணி, தாரகை நிறுவனர் சித்ரா உள்ளனர்.



உங்களை நம்புங்கள் ; நம்பிக்கையோடு விரும்பியதைப் பெறலாம்.

# சித்தார்த்தனை தேடும் போதிமரங்கள்

அந்தக் கல்லூரி எதிரே
பழைய நூல் கைலாயம் அமைத்து
திரிசடைக் கடவுள் போல் ஒருவன்
திரிகிறானே கண்டாயா நீ?

நக்கீரப் பேராசிரியர்களிடமும்
கத்துக்குட்டி தருமிகளிடமும்
எதிர்வாதம் செய்யும் அந்த
தமிழ்க்கடவுளை தரிசித்தாயா நீ?

அருந்தமிழ் நூல் காக்கும்
அகத்திய முனிபோலும் - அந்த
அடர்ந்த மரத்தடியில் - அவன்
அற்புதத் தவம் அறிவாயா நீ?

பாற்கடலில் பள்ளி கொள்ளும்
பரந்தாமனைப் போலும் - பழைய
நூற்கடலில் நூதனமாய் அவன்
பள்ளிகொள்வதைப் பார்த்திருக்கிறாயா நீ?

பகலிலே மீன்களின் கூட்டமாய்
பரவசப்படுத்தும் பழைய புத்தகங்கள் - இரவிலே
பாலிதீன் போர்வைக்குள் விம்மி, வீங்கி
ஆதிசேசனாய் அச்சுறுத்தும்...

எந்தத் திருவாதவூரனுக்காய்
குறுந்த மரத்தடியில் ஞானபீடமாய்
இந்த மனித மகான்?

சித்தார்த்தனுக்காய் தவம் இருக்கின்றன
இந்த போதிமரங்கள்...

– பேனா மனோகரன், மதுரை.

# கண்டேன்... கண்டேன்...

கண்ணியமும் கட்டுப்பாடு கடமை உணர்வுகள் அற்று
கண்ணியமில்லாக்குருடர் போல் சிலர் அலையக்கண்டேன்
மண்ணிலே அழியும் உயிர்களை நினைக்காது பலர்
புண்ணியம் தேடிக் கோவில்கள் ஏறும் பக்தரைக் கண்டேன்...!

தாய் மொழி பேசவே பலர் தயங்கித் தவிப்பதையும்
வாய் மொழியில் பல பேசி தாய் மொழி இழக்கக் கண்டேன்
சேய் மொழியாம் செந்தமிழை மறந்திடும் பலர்
மாய்ந்து மண்டியிட்டு தாய் மண்ணை மறந்தவர் கண்டேன்...!

கோடி கோடியாய் பணம் குவித்துப் புள்ளிகளாகப் பலர்
மாடி வீடுகளுடன் மாண்புடை மகிழுந்துகளுடன் கண்டேன்
வாடி நிற்கும் உறவுகளை மறந்து புகழ்தேடி அலைந்து பலர்
கூடீக் குடித்து கும்மாளம் அடிக்கும் கூட்டம் கண்டேன்...!

முகத்தில் துதிபாடி மூத்த தமிழினம் என்று புகழ்பாடும் சிலர்
அகத்தில் கறள் வடித்து அந்நியமாகும் வாழ்வு கண்டேன்
மனத்தில் நல்லவை நினையாமல் தீயவற்றை நாடியே
புலத்தில் பகை விதைத்து மனித நேயம் அழியும் நிலை கண்டேன்...!

– வ. சிவராசா, மண் சஞ்சிகை ஆசிரியர், ஜெர்மனி.

# வெற்றிப்பாதை

**நம்மை புதிய உலகுக்கு இட்டுச் செல்லும் பயிற்சிக் களம்**

நோக்கம் : **ஆக்கத்திற்கான ஊக்கமும் - உற்சாகமும் தருவது**

இலக்கு : **வாழ்க்கை மேம்பாடும் - குடும்ப குதூகலமும்**

திட்டம் : **பயிலவும் - பழகவும் - பக்குவம் பெறவும் படிப்படியாய் பயிற்சிகள்**

- தன்னை அறிவது எப்படி? - பிறரைப் புரிவது எப்படி? - பேசுவது எப்படி - பழகுவது எப்படி?
- முடிவெடுப்பது எப்படி? - இலக்கை அடைவது எப்படி? - திட்டமிடுவது எப்படி? - செயல்படுவது எப்படி?
- உடல் நலம் பேணுவது எப்படி? - மனவளம் காப்பது எப்படி?
- பொருள்வளம் பெருக்குவது எப்படி? - கற்பனையை வளர்ப்பது எப்படி? ? நினைவாற்றலை மேம்படுத்துவது எப்படி?
- தலைமை ஏற்பது எப்படி? - சிக்கலைத் தீர்ப்பது எப்படி? - செய்திறனை மேம்படுத்துவது எப்படி?
- ஐயம் தெளிவது எப்படி? - அணியாய் பணிபுரிவது எப்படி? - ஊக்குவிப்பது எப்படி? - நற்பழக்கம் மேற்கொள்வது எப்படி?
- தேர்ந்தெடுப்பது எப்படி? - நேர மேலாண்மை எப்படி? - தடைகளைக் கடப்பது எப்படி? - வெற்றி பெறுவது எப்படி?

இப்படி படிப்படியாக... மாதமொரு பயிற்சி.... மனமெல்லாம் மகிழ்ச்சி...

குடும்பதோடு வாருங்கள்... கொண்டாடி மகிழுங்கள்....

வெற்றிப்பாதை - திருச்சி மாநகரின் திருப்புமுனை

**தொடர்புக்கு :**

**9360205875, 9944477447, 9443284823**

"புதிய உலகம்" ஆத்ரேயா கார்மெண்ட்ஸ், வில்லியம்ஸ் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி - 620 001.




எது தீயதோ அதை கண்டுபிடிப்பதோடு, முறியடிக்கவும் வேண்டும்.

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்.

ஆற்றலை உணர்த்தி
ஆளுமை வளர்த்து வெற்றியைக் குவிக்கும்

# வெற்றிப்பாதை

நம்மை புதிய உலகுக்கு இட்டுச் செல்லும் பயிற்சிக் களம்

*வழங்கும்*

## ஆளுமை அரங்கம்

மாதந்தோறும் பயிற்சி... மனமெல்லாம் மகிழ்ச்சி...
மே மாதப் பொருள்

## பங்குச்சந்தையும் பலன் தரும் முதலீடும்

ஆலோசனை வழங்குபவர்
பிரபல பொருள்வள ஆலோசகர்...

**திருமிகு. சோம வள்ளியப்பன்**

**11-05-08 ஞாயிறு**
**பகல் 10 மணிமுதல் 1 மணிவரை**



**இடம் : அண்ணாமலை ஹோட்டல்,**
மத்திய பேருந்துநிலையம் அருகில், திருச்சி.

*அனுமதி கட்டணம்* **ரூ. 200/-**

**பங்கேற்போர் - பயன் பெறுவர்**

X

**"வெற்றிப்பாதை" - திருச்சி மாநகரின் திருப்புமுனை**



எது சரியோ அதை தெரிவிப்பதோடு, அதை அமுல்படுத்த வேண்டும்.



5

# வெற்றியை வென்றெடுப்போம்...

கவிஞர் லெனா

ஒவ்வொரு முயற்சிக்கும் ஒரு முடிவு இருக்கும். அந்த முடிவு எதிர்பார்த்த வகையில் அமைந்தால் மனமானது அதை வெற்றி என பறை சாற்றுகிறது. எதிர்பாராதது நடக்கும் போது தோல்வி என்கிறது.

எனது அண்ணன் ஒருவர், தனியார் நிறுவனம் ஒன்றில் தலைமை மேலாளராக பணிபுரிகிறார் அவருக்கு காரியதரிசியாக (P.A) ஒரு நபர் வேலை செய்யத் தேவைப்படுவதால், அவர் நாளிதழில் வேலைக்கு ஆள் தேவை என விளம்பரம் செய்தார். சுமார் பதினைந்து விண்ணப்பங்கள் வந்தது. அதில் பனிரெண்டு நபர் நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். அதில் கல்வித் தகுதியில் மற்றவர்களை விட குறைவான ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். மிகுந்த ஆச்சரியத்தோடு எனது அண்ணன் அவர்களிடம் கேட்டேன்.

அவர் சென்னார் "நீ நினைப்பது சரி. மற்றவர்களைவிட குறைவாக படித்தவன்தான், இருப்பினும் அவன் என்னுடைய அறையில் நுழைந்த வுடன் கதவை மெதுவாக சாத்தினான். இது அவன் மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பவன் என்பது தெரிந்தது இரண்டாவது மேசையில் இருந்து தவறி விழுந்து கிடந்த நூலை, மேசை மீது மெல்ல வைத்தான். இது அவனுடைய பொறுப்புணர்ச்சியை காட்டியது. மூன்றாவதாக மெல்லிய புன்னகையும், திடமான பார்வை யுடனும் நன்றி கூறி அவன் சென்ற விதம் ஆகியவைதான் அவனைத் தேர்ந்தெடுக்க வைத்தது.''

வெற்றி என்னும் கனி தானாக கனிவதில்லை. அதற்கென சில முயற்சிகள் தேவைப்படுகிறது. வெற்றியாளர்கள் எல்லா நிலைகிளிலும் மனம் தளராமல் உழைப்பவர்கள். சராசரி மனிதனை விடுத்து சாதனையாளனாக முயல வேண்டும்.

எந்த நிலையில் இருந்தாலும் அடுத்த நிலை பற்றிய சிந்தனையே, சிறந்த நிலையை உருவாக்கும்.

வெற்றி பெறுவதற்காகவே இந்த வாழ்க்கை கிடைத்துள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு முறை மனோதத்துவ நிபுணர் ஒருவர் தனது பத்து மாணவர்களுக்கு, ஒரு கணக்கு ஒன்றைத் தந்து தீர்வு காணச் சொன்னார். மாணவர்களில் சிலர் சென்னார்கள், இந்த கணக்கு சிரமம். நம்மை சோதிப்பதற்கே ஆசிரியர் தந்துள்ளார். முடிவு என்னவென்று பார்த்தால் சிரமம் என்று



முதலில் உலகத்தை நீ புரிந்துகொள் ; உலகம் தன்னால் உன்னை புரிந்து கொள்ளும்.

சொன்னவர்கள் தவறான விடை கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் சரியான விடை வைத்திருந்தார்கள்.

வெற்றி என்பது முயற்சி செய்பவர்களுக்கு மட்டுமே. சும்மா இருப்போர்க்கு அது கிடைப்பதில்லை. வெற்றி பெருமையையும், பெருமிதத்தையும் கொண்டு வந்து சேர்க்கும். அங்கிகாரத்தையும் மரியாதையையும் கொண்டு வந்து சேர்க்கும். வெற்றி பெற்றவனைத்தான் இந்த உலகம் போற்றிப் புகழும்.

நிறைவாக மக்கள் விஞ்ஞானி, தன்னுடைய வெற்றி குறித்து என்ன கூறுகின்றார் என்று பார்ப்போமா?

1. நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள துறையில் போதுமான அளவு அறிவைப் பெற்றிடுங்கள்.

2. ஒரு நோக்கத்துடன் செயல் படுங்கள். விடாமுயற்சியோடு தங்களின் நோக்கத்தில் குறியாக இருங்கள்.

3. நீங்கள் எத்தனை முறை தோல்வி அடைந்திர்கள் என்பதை கணக்கிட வேண்டாம். தொடர்ந்து முன்னேறுங்கள்.

4. மற்றவர்களை பற்றியோ அல்லது அவர்களின் தோல்வி பற்றியோ கவலைப்படாதிர்கள்.

5. எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு. நீங்கள்தான் தேட வேண்டும்.

எல்லோராலும் விரும்பப்படுகின்ற வெற்றியை தொடர்ந்து பெற்றிடுங்கள். (தொடரும்)

## சிரிக்கும் சித்திரையே...

வசந்த காலம்தான் என்றாலும்
கசந்திடும் காலமே பலருக்கு
பூக்களும் கனிகளும்
பூத்துக் குலுங்கும்
மாக்களும் குலுங்கும்
மகிழ்ந்து வரவேற்கும்!
நாக்கு வறண்டே நடுத்தெருவில்
போக்கிலா திரிவோரும் பலருண்டு!

பள்ளிகள் விடுமுறைதான் ஆனாலும்
படித்துக்கொண்டே இருப்பார்கள்
ஒருசிலர் உயர்ந்த செலவில்!
வீதியெல்லாம் திருவிழாக்கள்
சாதிக் கலவரங்களோடு!
குளிரான இடந்தேடி
கும்மாளமடிக்க லட்சாதிபதிகளின்
குடும்பங்கள் ஓடும்!

குடிக்கக் கூழில்லாமல்
குடல்கள் பல வாடும்!
தாழில்லை தாழ்வாரமில்லை
பாயில்லை பனையோலைக்
குடிசையுமில்லை!
வறுமைக்கோடு வளர்கிறது
வாய்கிழிய வளர்ச்சிப்பேசி
அரசாங்கம் ஆள்கிறது!



சுட்டெரிக்கும் வெய்யிலில்
பட்டுழலும் சிற்றுயிர்போல்
வறுமையின் கொடுமையில்
வாடிடுவோர் வளம்பெற
சிரிக்கும் சித்திரையே வருக!

சு. சண்முகசுந்தரம்,
புதுச்சேரி.



வெற்றி வேட்கை உள்ளவன் விழிகள் உறக்கத்திலும் விழித்திருக்கும்.

# எதிர்பார்ப்பு

அப்பா... அப்பா என்று சப்தமிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் சுதன். எந்த சப்தமும் கேட்காதது போல் வீட்டில் உள்ள ஹாலில் வழக்கமாக பார்க்கும் தன் வரவு செலவு கணக்குகளை ஆராய்ந்து கொண்டிருந்தார் வரதன். சுதன் அருகில் வந்து நின்று கொண்டு அப்பா.. அப்பா என்றான். சிறிது நேரம் கழித்து சுதாரித்தது போல் மெதுவாக "என்னடா? இங்கு வந்த நிக்கிறே?" என்றார் வரதன்.

அவன் அப்பாவின் கையை பிடிப்ப தற்குள் உதறிவிட்டபடியே "டேய் நான் என்ன வேலை செஞ்சிக்கிட்டிருக்கேன்னு தெரியல? எதாவது சொல்லனும்னா உங்க அம்மாகிட்டே சொல்லு" என்று கூறிவிட்டு மறுபடியும் தன் வேலையில் மூழ்கிப் போனார் வரதன்.

சே.. எதுக்குத்தான் எனக்கு இப்படி ஒரு அப்பாவோ என்று முணுமுணுத்துக் கொண்டே அம்மாவை நோக்கி ஓடினான் சுதன். சுதனை பெற்றெடுத்த திலகா உள்ளே சமையலறையில் சாமான்களை அடுக்கிக் கொண்டும், அடுப்பில் உள்ள சட்டியில் எதையோ கிளறிக் கொண்டும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

சுதன் கதவின் அருகே நின்று கொண்டே அம்மாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளோ வேலை பரபரப்பில் சுதனை கவனிக்காமல் போகவே. சுதன் மெல்ல அம்மா..அம்மா என்று முணுமுணுத்தான். திலகா சுதனை திரும்பிப் பார்த்தவுடன் "சுதன் இன்னிக்கு என்ன ஹோம் ஓர்க்? உன் ரூமுக்குப் போய் பாடங்களை படி. அடுத்த வாரம் பரிட்சைன்னு தெரியுமில்ல. போய் சீக்கிரம் படி என்ற விரட்டிக் கொண்டிருந்தாள்."

சுதனின் முகம் வாடி, அங்கிருந்து அகன்றான். மெதுவாக தன் ரூமில் போய் உட்கார்ந்து பையில் உள்ள புத்தகங் களையும், நோட்டுக்களையும் பிரித்தான். மனசெல்லாம் பக்கத்து வீட்டு ராஜன் மேல் இருந்தது. ராஜன் எவ்வளவு கொடுத்து வைத்தவன். அவன் அப்பாவும் அம்மாவும் அவன் மேல் எவ்வளவு பிரியம் வைச்சிருக்காங்க. அவன் கேட்டதை யெல்லாம் அவன் அப்பா வாங்கிக் கொடுக்கும்போது ராஜன் ஓடி வந்து சுதனிடம், அவன் அப்பா வாங்கிக் கொடுத்த விலை உயர்ந்த பொருளை யெல்லாம் பெருமையாக காட்டும் போது சுதனின் மனம் ஏங்கித் தவிக்கும். அதே ஏக்கத்துடன் சுதன் தன் அப்பாவை நெருங்கும் போதெல்லாம் அவன் தன்னிடம் ஏதாவது வாங்கித் தரச் சொல்லி செலவு வைத்துவிடுவானோ என்று பயந்து, சுதனிடம் ஏதாவது ஒரு சாக்குச் சொல்லி விரட்டிக் கொண்டே இருந்தார் வரதன்.

தனக்கு பிரியமான எதையும் தன் அப்பா இதுவரை வாங்கித்தந்ததில்லையே என்று கவலைப்படுவான் சுதன். தன் அப்பாவிற்குதான் மகன் என்பதைத் தவிர, அந்த உறவுக்கான அர்த்தங்களை பெற முடியாதவனாயிருந்தான் சுதன் அம்மாவிடம்

எப்படி கேட்பது? வாயைத் திறக்கும் முன்பே படி... படி... என்று விரட்டுகிறாளே. அப்படி கண்டிப்பதற்கு காரணமாயிருப்பவன்தான் அவன் அப்பாவாயிற்றே வாயற்ற ஊமைப் போல் கிடந்தான் சுதன். முகத்தில் மகிழ்ச்சி இல்லை.

தேர்வு முடிந்து விடுமுறை வந்தது பக்கத்து விட்டு ராஜன் தனது பெற்றோர் களுடன் கொடைக்கானல் சுற்றிப் பார்க்க கிளம்பிவிட்டான். சுதன் தனியாளாய் கிடந்து அவதியுடன் விடுமுறையைக் கழித்தான்.

பள்ளி திறந்ததும் மனச்சோர்வோடு பள்ளிக்கு தாமதமாகக் கிளம்பிக் கொண்டிருந்தான் சுதன். பக்கத்து வீட்டு ராஜன் உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் எழுந்து பள்ளிக்கு முன்னரே கிளம்பி விட்டான் என்பதை செல்லிக் காட்டி "சுதன் சீக்கிரம் கிளம்பு" என்று அவனை விரட்டிக் கொண்டிருந்தாள் சுதனின் தாய் திலகா. சுதன் வேண்டா வெறுப்பாக பள்ளிக்கு கிளம்பினான்.

பள்ளியில் மாணவர்களை அழைத்து தலைமை ஆசிரியர் முன்பு விடைத் தாள்களை கொடுத்துக் கொண்டிருந்தார். ஆசிரியர் சுதனின் மனம் படபடத்துக் கொண்டிருந்தது. சுதன் எழுந்து பயத்துடன் ஆசிரியர் அருகில் நின்றான்.

ஆசிரியர் சுதனின் முகத்தைப் பார்த்து விட்டு தலைமையாசிரியரிடம் அவனது விடைத்தாள்களை கொடுத்துப் பார்க்கச் சொன்னார். தலைமையாசிரியர் விடைத் தாள்களை புரட்டி பார்க்கப் பார்க்க.. அவர் முகம் மலர்வதை கண்டான்.

சுதனின் பெற்றோர் வரவழைக்கப் பட்டனர். விடைத் தாள்களை சுதனின் பெற்றோரிடம் கொடுத்தார் தலைமையாசிரியர். விடைத்தாள்களை பார்வையிட்ட திலகாவும் வரதனும்தன் கண்களையே நம்ப முடியாத அளவிற்கு ஆச்சரிய



மடைந்தனர். சுதன் ஒவ்வொரு பாடத்திலும் முழுமையான மதிப்பெண்களைப் பெற்று வகுப்பில் முதலாவதாக தேறியிருந்தான். அவனது திறமையை பெற்றோர் முன்பும், அனைத்து மாணவர்கள் முன்பும் பாராட்டத்தான், தலைமையாசிரியர் அவர்களை அழைத்திருந்தார் என்று அப்போதுதான் சுதனுக்குப் புரிந்தது.

சுதனை தலைமையாசிரியர் அருகில் அழைத்து, முதல் மாணவனுக்கான நற் சான்றிதழையும் பரிசையும் வழங்கியபோது, ஆசிரியர்களும் மாணவர்களும் அவனை சூழ்ந்து கொண்டு பாராட்டினர். தன்னை விட தன் படிப்பில் மட்டும் குறியாயிருந்த தன் பெற்றோருக்கான எதிர்பார்ப்பை, மதிப்பெண்களில் மதிப்புடன் நிறைவேற்றிய மகிழ்ச்சியுடன் சுதன் தன் பெற்றோர் முகத்தை ஏறிட்டு நோக்கினான்.

அந்த முகத்தில், பெற்றோரிடம் அவனுக்கான எதிர்பார்ப்புகளும் தேங்கிக் கிடந்தன என்பதை யார் அறிவார்? ■


## நந்தவனம் இதழ் ஆண்டுக்கட்டணம்

| | |
|---|---|
| 1 வருடக் கட்டணம் | ரூ. 60/– |
| 2 வருடக் கட்டணம் | ரூ. 120/– |
| புரவலர் கட்டணம் | ரூ. 1,000/– |
| வெளிநாடுகளுக்கு | |
| 1 வருடக் கட்டணம் | ரூ. 500/– |
| புரவலர் கட்டணம் | 200 டாலர் |




உள்ளத்தூய்மை உன்னை மனிதனாக்கும், உடல் தூய்மை உன்னை வீரனாக்கும்.




# சிறை

புதிய கரு, புதிய களம், புதிய ஆரம்பம், அவதியுரவைக்கும் கதை வளர்ப்பு, இம்சைபடும் கதைமுடிவும், புதிய அவதார வேதனைகளைக் கொடுக்கிறது என்ற தன் சிந்தனை பகிர்தலோடு மலேசிய எழுத்தாளர் புன்னியவன் தனது இரண்டாவது தொகுப்பு நூலாக தேசிய அளவில் பல்வேறு நிலையில் போட்டிகளில் பரிசு பெற்ற கதைகள் தொகுக்கப்பட்டு வெளிவந்திருக்கும் சிறுகதை தொகுப்பு நூல் "சிறை". எழுதிவிட்டுப் போயிருக்கிறான் பிரம்மன் என் உருவில் என்றும், மனைவியின் நல்ல உள்ளத்தை புரிந்த கொள்ளாமல் போதைக்கு அடிமையாகி ஊர் சுற்றி விபத்துக்குள்ளாகி படுக்கையில் கிடக்கும் கணவன், தன் மனைவியின் அன்பை நினைத்து அவள் கால்களை தொட்டு வணங்க ஒரு வாய்ப்புக்காக ஏங்கிக் கொண்டிருப்பதை "சிறை" என்ற கதை விளக்குகிறது.

அவள் துணி நனைக்கும் சாக்கில் சுவர்பக்கம் திரும்பிக்கொண்டு கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள். அதிகபட்ச துயரத்தில் இருக்கும் என்னை அவள் கண்ணீர் மேலும் அழுதிடக் கூடாது என்று நினைக்கிறான் என்று காட்சிகளை அழகியலோடு நகர்த்துகிறார். மொழியும் நம்ம புள்ளதாங்க... நாம்தான் பேணி வளர்த்தாகணும். மொழி வளர்க்கின்ற அடித்தளம் தமிழ்பள்ளிதான் என்று தன் மகனை தமிழ் பள்ளியில் சேர்க்க கணவனிடம் விவாதம் செய்வதாய் தமிழ் மொழி குறித்த புரிதலோடு விளக்கும் கதை. "மெல்லத் தமிழினி தவிப்பு" என்ற கதையில் கருப்பண்ணனுக்கு நரை கூடியிருந்த, காலம் வரைந்த கோடுகள் முதுமையை கூட்டியிருக்கிறது என்று நரையை காலத்தோடு ஒப்பிடும் உவமையும், தண்டனையை அனுபவித்து தவறை நினைத்து தன்னால் காயப்பட்டவனை சந்திக்க வரும் ஒவ்வொரு காட்சியமைப்பும் திரைக்கதையின் முடிவைப் போல் விறுவிறுப்பை உணர முடிகிறது.

தண்ணியில நீந்துற குஞ்சுங்க சிலுப்பும் போது அம்மா திருவிழா அன்னிக்கு போடுகிற ஒத்த மூக்குத்தி மாதிரி மினுமினுக்கும், மானத்திலே குருவி மட்டுமா பறந்திச்சு நானுந்தான் என்று கற்பனைக்கு உயிர் கொடுத்த வரிகளாய் "அது" என்ற கதையில் காணமுடிகிறது ஒரு மரணம் நிகழ்ந்து விட்டால் இச்சமூகம் அதை எப்படி லாப நோக்கோடு கருதுகிறது என்பதையும் மரணித்த வீட்டின் நிகழ்வுகளையும், முறைகளையும் கதையாய் தொகுக்கப்பட்ட "யாமிருக்க" என்ற கதையும், பிறந்த மண், வளர்ந்த மண், தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த மண், இந்த மண்ணே மனிதனுக்கு கொடுக்கப்படவில்லையென்று எவ்வளவு பெரிய அநியாயம் என "மண்தேசம்" என்ற கதையும் கவலையின் வெளிப்பாடாய் வெளிப்படுத்துகிறார். ஒவ்வொரு சமூக பிரச்சனையையும் மையமாகக் கொண்டு தன் பார்வைகளை கதைக்கு கருவாக கொண்டு 17 சிறு கதைகளை கதாபாத்திரத்திற்கு பல்வேறு உத்திகளை கையாண்டு கதை சொல்லியிருக்கிறார். திரைக்கதையின் முன் கதையின் சுருக்கம் போல் கதைக்கு முன் ஒவ்வொரு அறிஞர்களின் விமர்சன ஆய்வோடு ஒவ்வொரு கதையும் தொடங்குவது சிறு கதை தொகுப்பின் புதுமையான முயற்சி.

– எஸ். பீர்முகம்மது

வெளியீடு : Punniyavan, 37,lorong Beringin-2,Tamam Beringin 08000, SG. Pertani, Keddah, Malaysia, Tel: 004242743 Price: RM.10.00

நூல்நயம் பகுதிக்கு நூல்கள் அனுப்புவோர் இரண்டு படிகள் அனுப்ப வேண்டும்.



எளிமை என்பது ஏழ்மையல்ல. ஏழ்மை ஒருபோதும் இழிவுமல்ல.

### வாடாத மலர்கள்



கவிஞர் த. அனந்தராமனின் மூன்றாவது படைப்பாக வெளிவந்திருக்கும் கவிதை தொகுபபு நூல் "வாடாத மலர்கள்". தண்ணீரைப் பாதுகாப்போம் என்ற கவிதையில் "தண்ணீரோ சீதையைப் போல சிறையிலிருக்கிறது. இராவணக்கிருமிகள் உன்னைத் தீண்டியிருக்குமோ" என்று இன்றைய தண்ணீர் பிரச்சனையின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறார். மரங்களுக்கு கலப்பு மணம் செய்து வைத்துவிட்டு "சமூகத்தில் காதல் ஜோடிகளை பிரிப்பது புண்ணியமோ?" என இன்னும் கிராமங்களில் நடக்கும் மரங்களுக்கான திருமண நிகழ்வை சாதிய பிரச்சனைகளோடு "வேப்ப மரங்கள்"என்ற கவிதையிலே ஒப்பிடுகிறார். சைவ உணவு உட்கொண்டு அசைவ செயல்கள் செய்யும் அரக்கர்கள் என்று போலித்துறவிகளை சாடுகிறார். தகவல்களுக்காக தத்தெடுக்கப்பட்ட செல்லக்குழந்தை சட்டைப் பையிலேயே உறங்குகிறது "செல்போன்" என அழகியலோடு குறிப்பிடுகிறார் "ஆக்ரா நதிக்கரைக்கு காதலின் அழகைச் சொல்லிக் கொடுக்கிற தாஜ்மஹால்" என்ற ஹைக்கூ ரசிக்கும்படி உள்ளது. வெளியீடு : கலை நிலா பதிப்பகம், 46, ஆசாத் நகர், கருணாநிதி நகர், திருச்சி–21. விலை ரூ 40/–

### மலர்விழி



எத்தனையோ பகுத்தறிவாளரும், முற்போக்காளரும் தோன்றி சமுதாய மறுமலர்ச்சியை ஊட்டியும் சாதி இன்னமும் மடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று சாதிக்கொடுமையை மையமாக வைத்து பாவலர் கருமலைத்தமிழாழன் அவர்களால் 44 தலைப்புகளில் 350 மேற்பட்ட பாடல்களை தொகுக்கப்பட்டு எழுதப்பட்ட 18 வது நூல் "மலர்விழி" எனும் பாவிய நூல் "கார்முகில்கள் கூட்டமின்றி ஏங்குகிற நிலமாகும் நீரைப்பாய்ச்சி ஏர் பிடித்தே ஏமாறும் உழவனாகும் தாங்குகின்ற இதயமின்றி நசிந்த வாழ்வில்" என்று இயற்கையை இணைத்து சமூக கவலையாய் வெளிப்படுத்துகிறார். "பிரிவு செய்யும் நூல் வருண மனுதர்மத்தைப் பிழையென குப்பையிலே போடு" "சமத்துவத்தை தூய பண்பை முன்னெடுத்தே தமிழ் என்ற பெருமை காப்பாய்" என்று பகுத்தறிவு சிந்தனைகளை பாக்களாக தொகுத்துள்ளார். முதல்வர் கலைஞர் வாழ்த்துரை மற்றும் அண்ணாவின் "காஞ்சி" இதழ் கவியரசு கண்ணதாசன், கவிஞர் கா.மு. ஷெரிப் தினமனி நாளிதழ் போன்றவர்கள் நூலாசிரியரைப் பற்றிய கருத்தோடு கூடிய அட்டைப்படம் கூடுதல் சிறப்பு. வெளியீடு : வசந்தா பதிப்பகம், 2/16 ஆர்.கே. இல்லம், வசந்த நகர் ஓசூர்– 635109. கிருட்டிணகிரி மாவட்டம். விலை. ரூ. 60.00/–

- எஸ். பீர்முகம்மது

### அம்மாவின் ஹைக்கூ



இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கைச் சூழலுக்கு கொஞ்சம் இதம்தரும் மருந்தாக இருப்பதே இலக்கியம். அந்தவகையில் வாழ்க்கையின் காயங்களையும், வலிகளையும் எதார்த்தங்களையும் அழகாக படம்பிடித்து மூன்று வரிகளில் முத்துமுத்தான ஹைக்கூ கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்திருக்கிறது. ஜெர்மன் எழுத்தாளரும் கவிஞருமான விக்னா பாக்யநாதன் அவர்களின் அம்மாவின் ஹைக்கூ கவிதைநூல். புலம்பெயர்ந்த மண்ணில் புதுமைப் படைப்பாளியாய் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட விக்னா பாக்கியநாதன் அவர்கள் சிறந்த கட்டுரையாளர், சஞ்சிகை ஆசிரியர், பள்ளி ஆசிரியர் என பல பரிணாமங்களோடு எழுதிவருபவர். இந்நூலில் உள்ள கவிதைகள் ஒவ்வொன்றும் வெறும் வார்த்தை ஜாலங்களாக இல்லாமல் வாழ்வின் எதார்த்தங்களை மிக நேர்த்தியாக கையாண்டிருப்பதை அவசியம் பாராட்டியாகவேண்டும். கவிஞர் இரா. இரவியின் அணிந்துரையும், பொன்குமார், கன்னிக்கோவில் இராஜா ஆகியோரின் ஹைக்கூ பற்றிய ஆய்வும் நூலுக்கு மெருகூட்டுகின்றன. ஹைக்கூ ஆர்வமுள்ள அனைவரும் படிக்க வேண்டிய நூல். வெளியீடு : Kalaivizhakku, Door No.19, 444328, Dorfmund, Germany, Rs. 40/-

-நந்தவனன்



விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதல்ல வெற்றி, விழித்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி.




நந்தவனம் ஏப்ரல் இதழில் நூல் மதிப்புரையாக ஐயா. க.ப.அறவாணன் அவர்களின் திருக்குறள் சிறப்புரையினை வெளியிட்டமைக்கு நன்றி.தேவையான கருத்துகளை எழுதியமைக்கும், ஐயா அறவாணன் அவர்களைப் பற்றி குறிப்பிட்டமைக்கும் மிக்க நன்றி நல்ல புலமை நிறைந்தவர் தியாகசாந்தன் என நண்பர்கள் மதிப்புரையைக் கண்டு வியந்தனர்.

– தாயம்மாள், சென்னை.

ஏப்ரல் இதழில் வெளிவந்த கவிதைகள் அருமை. வளமையை நோக்கிய பயணம் சிறப்பு. ஈழத்து எழுத்தாளர் ரா. நித்தியானந்தன் இலக்கியத்தின் மீது காதல்கொண்டவர் என்பது பேட்டியில் பிதிபலித்தது.

– கமலிவெங்கட், நாமக்கல்.

ஏப்ரல் மாத நந்தவன இதழ் சிறப்பான சுய முன்னேற்ற கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி வெளிவந்திருந்தது. சிறுகதை, கவிதைகள், அயல் நாட்டில் கோலோச்சும் தமிழ் இலக்கியம் என பல்சுவை விருந்தாக உள்ளது இனிய நந்தவனம்.

– காந்தலட்சுமிசந்திரமௌலி, சென்னை.

ஈழத்து மலையக எழுத்தாளர் ரா. நித்தியனந்தன் நேர்காணல் மலையக மக்களுக்கும் வடகிழக்கு மாகாணங்களில் வாழக்கூடிய தமிழர்களுக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டிருப்பதும், அதைச் சரி செய்துவிடும்படியாக நம்பிக்கைகள் இன்னும் உருவாகவில்லை என்பதும் வருத்தத்துக்குரியது. இலக்கியம் மூலம் சமூக மாற்றத்தினை முற்றாக ஏற்படுத்துவது கடினமெனினும் அதற்கான பாதையினை இலக்கியம் உருவாக்கும். அந்த வகையில் எழுத்தாளர் நித்தியானந்தம் போன்றோர் செயலாற்றுவது மகிழ்ச்சிக்குரியது.

– கே.ரவிச்சந்திர, திருச்சி.

இலங்கை பிரச்சனை குறித்து தமிழ் இலக்கிய வாதியின் கருத்துகள் ஒரு தெளிவான புரிதலை உண்டாக்கியது. தமிழர்கள் என்ற தன்மான இன உணர்வைத் தூண்டிக்கூடிய வகையில் வெகு சிறப்பாக இருந்தது நேர்காணல். காசுபணம் தேடுவதிலேயே நேரம் செலவழித்து, நேசம் தொலைந்து போனால், தேசம் மட்டுமல்ல உலகமே நாசமாகிவிடக்கூடிய மெர்வினின் அபாய எச்சரிக்கை அலட்சியப்படுத்துவதற்கல்ல.

– சாமி, திருவண்ணாமலை.

இலக்கியம் என்பது சமூகத்தை மாற்றக் கூடிய ஒரு கருவி என்கிற ஈழத்து எழுத்தாளர் நித்தியானந்தன் அவர்களின் கருத்து அருமை. முள்ளில் ரோஜா சிறுகதையும், ம. திருவள்ளுவரின் வளமையை நோக்கியும் சுவை தந்தன. உணர்ச்சிக் கவிஞரின் புரட்சிக்கவிஞன், பலமுறை படித்தாலும் திகட்டாத தேன் கவிதை.

– அஞ்சூர் எம். அழகர்சாமி, ஈரோடு.

தில்லையம்பதியில் தேவாரம் பாடவிடாமல் நந்தியாய்க் குறுக்கிட்டுத் தொல்லை கொடுத்த தீட்சதர்களின் ஆட்டுவித்தலுக்கு முற்றுப்புள்ளியிட்டு தமிழ்ப்பண் ஓத வழிசெய்த தமிழக அரசையும், அக்களத்தில் இறங்கி தொய்வுறாமல் எதிர்ப்புகளை துச்சமாக்கி பரிவட்டத்தைத் தூக்கியெறிந்து தேவாரப் பண்ணிசைத்த ஆறுமுகசாமியையும் பாராட்டி தீட்டப் பெற்றிருந்த தலையங்கம் தமிழர்களை தட்டி எழுப்புவதாயிருந்தது. செந்தில்குமாரின் மந்திர சொல்லுக்கு கப்பல் மூழ்க எத்தனிக்கும்போது கடலில் தவிக்கும் மாலுமியாய் மன உளைச்சலில் எதிர் காலத்தை எண்ணாமல் நிகழ்காலத்தில் முடங்கிக் கிடக்கும் இளநெஞ்சங்களுக்கு ஒத்தடங் கொடுத்து தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டுவதாக இருந்தது. – புலவர் ந. ஞானசேகரன், தஞ்சை.

நுழைவாயில் நன்கமைந்திருந்தது. தமிழின் வெற்றையையும், தமிழர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதையும் கூறியது. கவிதைகள் சிறப்பாக அமைந்திருந்தது. இலக்கியம் என்பது சமூகத்தை மாற்றக் கூடிய ஒரு கருவி யே என நித்தியானந்தன் கூறியது உண்மையே. – பொன்குமார், சேலம்.

பெண்ணியவாதம் பற்றிய திரு.நித்தியானந்தன் அவர்களின் கருத்துகள் இன்றளவும் உணரப்பட வேண்டியவை, பின்பற்றப்பட வேண்டியவை. மறுபுறம் பெண்ணியவாதம் எப்படித் தவறாகப் புரிந்துகொள்ளப் பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகக் கூறியிருப்பது தற்போதைய பெண்கள் சமுதாயம் உணர வேண்டிய ஒன்று. – தனலெட்சுமி பாஸ்கரன், திருச்சி.

தலையங்கத்தில், தமிழன் காசு இனிக்கும் தமிழ் மொழி கசக்குமா? என சிதம்பரம் தீட்சதர்கள் தலையில் கொட்டியது நன்று. யார் வெற்றியாளர்? கட்டுரை சுயபரிசோதனைக்கு வழிவகுத்தது. துளிப்பாவனத்தில் கொள்ளை போனது மனது. ஈழத்து எழுத்தாளர் ரா.நித்தியானந்தன் நேர்முகம் நன்று. நூல்நயம் நயமான பதிவு. சிறுகதை சிந்திக்க வைத்தது. வளமையை நோக்கி கட்டுரை புகழ் பெற்ற வைரவரிகளை எடுத்துக்கூறி இயல்பாக தன்னம்பிக்கை விதை விதைத்து. – இரா.இரவி, மதுரை.



உதிரம் உறையும்வரை போராடு, உனக்காகத்தான் இந்த விடியல் என்று எழு.

நுழைவாயில் பகுதி தன்மானத் தமிழினத்தை தலைநிமிரச் செய்துள்ளது. ஈழத்து எழுத்தாளர் திரு. ரா.நித்தியானந்தன் நேர்காணல் மிகவும் அருமை. ஈழத்து எழுத்தாளர்களை உலகத்திற்கு அடையாளம் கட்டும் ஒரே சிற்றிதழ் இனியநந்தவனம் என்றால் அது மிகையாகாது. – ஈழக்கவிதாசன் மா.ஞானசூரி, அறந்தாங்கி.

ஈழத்து எழுத்தாளர் ரா. நித்தியானந்தன் அவர்களின் நேர்காணல் படித்தேன். இலங்கையில் நான் வாழ்ந்த வாழ்க்கையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கையைப் பார்க்கிறேன் என்று ஆரம்பித்துள்ளார். இங்கே சுதந்திரமாக எங்கள் தமிழ் மண்ணில் நடக்கிறோம் என்று எண்ணி மகிழ்கிறார். அந்த மகிழ்விற்குப் பின்னால் உள்ள அழுகுரல் மனதைப் பிசைகிறது. எது நிலையானது? என்ற வினா எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஒரு புதிய சிந்தனையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் அவரது எழுத்துக்களில் வீரியம் அதிகமுள்ள தெளிவும், தன்னம்பிக்கையும் கொண்ட எழுத்துக்களாகவே அமைந்து விடும். நிச்சயம் அது ஆறுதல் அளிப்பதாகவும், கல்வியின் முக்கியத்துவம் பற்றி மேலும் எடுத்துக் கூறுவதாகவே அமையும். மாந்தன் விருதாளர்க்கும், மற்ற பரிசு பெற்றோர்க்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்கள். சிந்தனையின் வெளிப்பாடு தாளைக் கருப்பாக்குவதாகவும், வாய் வலிக்கப் பேசுவதாகவும் இருக்கலாம். ஆனால் என்ன சொல்கிறது பொது நன்மைக்கு என்பதுதான் பரிசை அளிக்கிறது. தலையங்கம் ஒகேனக்கல் பிரச்சனைக்கு முன்பே எழுதப்பட்டு விட்டது புரிகிறது. தன்னம்பிக்கை லெனா, சொந்தக் காலில் நிற்பவர்களின் வெற்றி குறித்துப் பேசும் எஸ்.செந்தில்குமார் கட்டுரை உள்ளிட்ட அனைத்துச் செய்திகளும் பயனுள்ளவை. என் கவிதை குறித்துப் பாராட்டி எழுதியுள்ள நல்லுள்ளங்களுக்கு நன்றியை கூறிக்கொள்கிறேன். உணர்ச்சிக் கவிஞர் இனமான எழுச்சிக் கவிஞருக்கு எழுதியுள்ள பாடலைக் கண்டேன். அருமை.
– பாரதிதாசன் பெயர்த்தி மணிமேகலைகுப்புசாமி, புதுச்சேரி.

ஏப்ரல் 2008 இதழில் குறும்படப் பரிசளிப்பு விழா செய்தி வெளியிட்டிருந்தமைக்கு நன்றி. தங்களது இதழில் வெளிவரும் செய்தி, கட்டுரைகளைப் பார்க்கும்போது உலக அளவிலான பெரிய குழுவின் ஒட்டுமொத்த கூட்டுழைப்பு தெரிகிறது. சிற்றிதழ் வெளியீட்டு சிரமங்கள் அனைத்தையும் தாண்டி இதழ் தொடர்ந்து குறித்த நேரத்தில் வெளிவருவது மனமகிழ்வு தருகிறது. – பாரதிவாசன், திருப்பூர்.

எழுத்தாளர் சுஜாதாவின் நினைவை போற்றும் விதத்தில் அவருக்கு செய்யும் அஞ்சலியாய் அவரின் எழுத்தாக்கத்தின் மூலம் "யார் வெற்றியாளர்?" என்ற சிகரங்களில் சித்திரங்கள் மூலம் நந்தவனம் சந்திர சேகர்–என்னைப் என்னைப் போன்றவர்களை மேலும் மேலோங்கி ஊக்கப்படுத்தியுள்ளார். ஈழத்தில் வடகிழக்கு மக்களுக்கும், மலையக மக்களுக்கும் உள்ள இடைவெளியை, காரணத்தை எழுத்தாளர் ரா.நித்தியானந்தன் மூலம் அறிந்தது இதுவரை நான் அறியாதது. – க. குழந்தைவேலு, மேட்டுதிருக்காம்புலியூர்.

ஏப்ரல் 2008 இதழில் ம. திருவள்ளுவரின் வாசிக்க வாசிக்க வளமை– தன்முன்னேற்றக் கட்டுரை மிகவும் பயனுள்ள அற்புதமான கட்டுரை. யார் வெற்றியாளர் என்ற தங்களின் கட்டுரையும் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிவகுப்பதாய் இருந்தது.
– தங்கசங்கரபாண்டியன், சென்னை.

இனியநந்தவனம் ஏப்ரல் இதழின் நுழைவாயிலில் தில்லைக்கோயிலில் ஓதுவார் ஆறுமுகச்சாமியின் வெற்றியையும், ஆரியவீழ்ச்சியையும், தமிழக அரசு செய்ததைப் பாராட்டியும், மேலும் செய்ய வேண்டியதைச் சுட்டியுமிருப்பது வரவேற்கத்தக்கது. ஈழத்து எழுத்தாளர் நித்தியானந்தன் நேர்காணல் சிறப்பு.
– திருக்குறளன்பன் ஆ.வே.இராமசாமி, வைரிச்செட்டிப்பாளையம்,

முள்ளில் ரோஜா சிறுகதை படித்தேன். மிகவும் கஷ்டமான வாழ்விலும் அன்பு பூக்கும் என்னும் அற்புதத்தை விளக்கும் விதமாக அமைந்தது. குடந்தை பரிபூரணன் அவர்களுக்கு பாராட்டுகள்.
– ஆர்.கே.காந்திதாசன், கரடிப்பட்டி.

இனியநந்தவனத்தின் 10வது ஆண்டு இதழ் கண்டு மகிழ்ந்தேன். பூத்துக்குலுங்கிய அத்தனை ஆக்கங்களையும் படித்துச சுவைத்தேன். நந்தவனத்தில் வீற்றிருந்து தமிழ் மணம் வீசிய அத்தனை படைப்பாளிகளுக்கும் இனிதான நன்றிகளும் வாழ்த்துக்களும். மென்மேலும் பல ஆண்டுகள் சிறந்து உயர்நது தமிழ் மழை பொழிய இனிதான என் வாழ்த்துக்கள். தமிழோடு இணைந்து பணி தொடர்வோம். கலை, இலக்கிய, எழுத்துப் பணிகள் வளர்ந்து புதிய சமுதாயம் படைத்து புதுப் பொலிவுடனும் மனித நேயப் பண்புகளோடும் உயர்ந்து, எழுந்து சிறந்து வாழ்வோம்... வளரட்டும் உங்கள் பணிகள் என வாழ்த்து மகிழ்கிறோம்.
– வ. சிவராசா, மண் சஞ்சிகை ஆசிரியர், ஜெர்மனி.



நேற்றைய தோல்வி, இன்றைய முயற்சி, அதுவே நாளைய வெற்றி.

எஸ். செந்தில்குமார்
சேர்மேன் – கோல்ட் ஈகிள் ஹோம் அப்லையசன்ஸ் (பி) லிட்
98435 33332



# மனஉளைச்சலில் எனது எதிர்கால இளைஞர்கள்...

நான் இன்றைய இளைஞர்களை
வேகம் மிகுந்தவனாகவும்
விவேகம் நிறைந்தவனாகவும்
தாகம் தடுப்பவனாகவும்
தவறுகள் தடுப்பவனாகவும்

இருக்கிறார்கள் என்றே கருதுகிறேன்.

நான் எப்போதும் என்னுடைய இளைஞர்களை எதிலும் விட்டுக் கொடுக்கமாட்டேன். என்னுடைய இளைஞர்களை மனதில்வைத்துத் தான் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் 2020-ல் இந்தியா வல்லரசு நாடாகும் என்று கூறினார். நாம் கண்டிப்பாக அவருடைய கனவை நனவாக்குவோம்.

மாவீரன் நெப்போலியன் ஒரு மிகப்பெரிய தன்னம்பிக்கை உடையவன். ஒருமுறை போருக்கு தயாராகிக் கொண்டிருக்கும்போது, தன் தளபதியை பார்த்து கேட்டான், எவ்வளவு படை வீரர்கள் இருக்கிறார்கள் என்று? அறுபதுனாயிரம் வீரர்கள் என்றான் தளபதி. உடனே நெப்போலியன் "அப்பனடியால், ஒரு லட்சம் பேர் உள்ளனர் என்று கூறு'' என்றான். உடனே தளபதி நான் "அறுபதி னாயிரம் வீரர்கள் என்றேன், நீங்களோ ஒரு லட்சம் என்கிறீர்களே எப்படி?''எனக் கேட்டான். உடனே மாவீரன் நெப்போலியன் கூறினான் "நான் என்னையும் சேர்த்தல்லவா கூறினேன் என்றான்' அது அவன் மீது அவனுக்குள்ள தன்னம்பிக்கை.

இளைஞனே (Early birds catches a worm) அதிகாலையில் எழும் பறவைக்குத் தான் உணவு கிடைக்கும் என்பார்கள். அது போல எந்த விஷயத்திலும் முதல் ஆளாக இரு! வெற்றி உன் வாசல் கதவை தட்டும்! இன்றைய இளைஞர்கள் வெற்றி வாசல் கதவை தட்டும் என்று கதவை மூடி வைத்துக் கொண்டு, ஒரு முயற்சியும் எடுக்காமல் உள்ளே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். நிறைய பேர் சூழ்நிலைக் கைதிகளாக இருக்கிறார்கள்.

தற்போது வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் ஒரு தமிழ் படம் "சந்தோஷ் சுப்பிரமணியம்''. இதில் தந்தை தன் மகனுக்கு பார்த்து பார்த்து ஒவ்வொன்றும் செய்வார். மகனும் அப்பா மனம் நோகாதபடி அதையெல்லாம் ஏற்றுக் கொள்வான். கேரம் போர்டு விளையாடும் போது கூட எதிரணியாக இருந்தாலும், அவர் தான் Direction கொடுப்பார். ஆனால் அவர் ஒரு விஷயத்தை மறந்து போயிருப்பார். நாம் செய்வது தன் மகனுக்கு பிடிக்குதோ, பிடிக்க வில்லையோ! அவனுடைய மனது என்ன சொல்கிறது என்று கூட அறியாமல் விட்டிருப்பார். முடிவு மகன் தன்னிச்சையாக முடிவு



துன்பத்தைப் பொறுப்பதே, துன்பத்தை வெல்வதற்கு வழியாகும்.

எடுக்க முடியாமல் தடுமாறும்பொழுது தன் அப்பாவை எதிர்த்து கேள்வி கேட்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி விடுகின்றது. அதை உணர்ந்து தன் தவறை உணரும் தந்தை மன்னிப்பு கேட்பதும், அதற்கு அவன் இல்லை அப்பா... நீங்கள் எல்லா அப்பாபோல் இல்லாமல் எனக்கு வேண்டியதை உங்கள் விருப்பம்போல் வாங்கித் தந்திங்கப்பா... என கண் கலங்க வெகு அருமையாக இயக்குநர் சொல்லி இருப்பார்.

இதில் அப்பாவை குறை கூற வில்லை. உங்கள் மகன் விபரம் தெரியாத வரை உங்கள் இஷ்டம் போல் வளர்த் திருப்பீர்கள். விபரம் தெரியும்போது ஒரு நண்பனை போல் பழகுங்கள். அவன் மனதில் உள்ள பயம், பிரச்சனைகளை அகற்றுங்கள் அது ஒவ்வொரு பெற்றோருடைய கடமை யாகும். இது மாதிரி ஒவ்வொரு பெற்றோரும் செய்யும்போது, வீட்டை விட்டு வெளி உலகுக்கு வரும் ஒவ்வொரு இளைஞனும் பட்டை திட்டப்பட்ட வைரமாக ஜொலிப்பார்கள் என்பது என் எண்ணம்.

''எல்லா குழந்தையும் நல்ல குழந்தைதான் இந்த மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பதிலே''.

இன்றைய இளைஞனுக்கு சுவாமி விவேகானந்தர் கூறும் தன்னம்பிக்கை வாசகம் :

உனது எதிர் காலத்தை நீயே உருவாக்கு. ஏற்கனவே நடந்து முடிந்ததை குறித்து வருந்தாதே. எல்லையற்ற எதிர்காலம் உன் முன்னால் விரிந்து பரந்து இருக்கின்றது. உன்னுடைய ஒவ்வொரு சிந்தனையும், சொல்லும், செயலும் அதற்கேற்ற பலனைத் தரும் வகையில் உன் மனதில் இடம் பெறும். இதை நீ மறக்காமல் நினைவில் வைத்துக் கொள். உனது தீய எண்ணங்களும் செயல்களும் புலிகளைப் போல் உன் மீது பாய்வதற்கு தயாராக இருக்கின்றன. அதைப்போலவே உனது நல்ல எண்ணங்களும், செயல்களும் ஒரு நூறு ஆயிரம் தேவைகளின் ஆற்றலுடன் உன்னை எப்போதும் நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கு தயாராக இருக்கின்றன என்னும் ஊக்கம் தரும் நம்பிக்கையும் இருக்கிறது. இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் என்கிறார்.

இளைஞனே! உன் தோல்விக்கு எப்போதும் உன் பெற்றோரை மட்டும் குறை கூறி விடாதே! அதில் நம்முடைய குறையும் இருக்கிறது. எந்த ஒரு வெற்றியும் சரியான திட்டமிடல், கடின உழைப்பு, விடாமுயற்சியினால் மட்டுமே கிடைக்கும் என்பது என் அனுபவத்தில் நான் கற்றுக் கொண்டது.

முன்பெல்லாம் உலகம் என்பது பெரிய விஷயமாகும். இப்போது அது நம் கைக்குள் அடங்கிவிடும் காலம். பல தோல்விகளையும் கஷ்டங்களையும் ஏற்றுக் கொண்டவன் தான் இன்று வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள். நீ வரலாற்றில் இடம் பெற வேண்டியவன். உனக்கு ஒரு வெற்றிடம் இங்கு இருக்கிறது. அந்த இடத்தில் உன் உலகத்தையும், சாதனைகளையும் பொறிக்க வேண்டியது உன் பொறுப்பு. இன்றே அதற்கான முயற்சியை எடு.

**நீ ஜெயிக்க பிறந்தவன். வெற்றி உனதாகட்டும்.**

**சோதனை + சோதனை = சாதனை**



கோபம் அன்பை அழிக்கும். செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.

# இனிய நந்தவனம் & ஸ்ரீ வாசவி கடாசம்

## இணைந்து நடத்தும்

# பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா



நாள் : **25 - 05 - 2008 சனிக்கிழமை**

நேரம் : **மாலை 5.30 மணியளவில்**

இடம் : **தமிழக அய்க்கப் இல்லம்,**
**திருச்சி.**

வரவேற்புரை : **ரா. மூத்துக்கோபால்,** ஆசிரியர், ஸ்ரீ வாசவி கடாசம் மாத இதழ்.

தொடக்கவுரை : **ம. திருவள்ளுவர்,** மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர்.

வாழ்த்துரை : **என். நல்லச்சாமி, B.A., B.L.,**
தமிழக முன்னாள் அமைச்சர்.

சிறப்புரை : **கவிஞர். தங்கம் மூர்த்தி,**
தாளாளர், வெங்டேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை.

**சிறப்புக் கவியரங்கம் :**

தலைமை : **புலவர் தியாகசாந்தன்,** ஆலோசகர், இனியநந்தவனம்.

பொதுத் தலைப்பு : *புரட்சிக்கவிஞர் பாவேந்தர் தரும்...*

| கவிஞர்கள் | பொருள் |
|---|---|
| கவிஞர். மா. கார்த்திகேயன் | மொழிப்பற்று |
| கவிஞர். அனுராதாகட்டபொம்மன் | நாட்டுப்பற்று |
| கவிஞர். எஸ்.பீர்முகம்மது | அழகின்சிரிப்பு |
| கவிஞர். சிவகவி காளிதாசன் | பகுத்தறிவுப்பார்வை |
| கவிஞர். திருமதி. எஸ்.பி.ஜெயா | மகளிர்நலம் |
| கவிஞர். தஞ்சை தாமு | சமுதாயச் சீர்திருத்தம் |

நன்றியுரை : **நந்தவனம் சந்திரசேகரன்,** ஆசிரியர், இனியநந்தவனம்.

விழா முன்நிகழ்ச்சி : பாரதிதாசன் பாடல்கள் இசை நிகழ்ச்சி

பாடுபவர் : **ஓதுவார் கதிர்பாரதி,** இசைப்பள்ளி ஆசிரியர், தர்மபுரி.

பக்கவாத்தியம் : இளம்சுடரொளி தவில்வித்வான் **பாரதிராஜா,** A. செக்காரப்பட்டி.



படிக்கக்கூடாத நூல்களை படிப்பவனும் அறிவிலியே.

## காரிகையும்... கற்பனையும்...

நுரைத்துக் கொண்டு வந்தது
துணிகள் நனைத்து சவுக்காரத்தால்
தேய்க்கும்போது...
கற்பனையும்தான் அக்கணம் பொங்கியது!

துவைத்துமுடிக்குமுன்னே அந்தோ! துரதிஷ்டம்
சுத்தமாய் மறைந்து உலர்ந்துவிட்டது கற்பனை
உலர்த்திப் போட்ட துணிகள் போல
சமையல் செய்யும் நேரம்
சட்டென்று அரும்பிய கவிதைக்கரு...

பசிமாறி, பிறர்பசியாற்றி நானும்
முற்றத்திலமர்ந்து எழுத நினைக்கையில்
மொத்த வரிகளும் வற்றியது மீண்டும்!

இனி தோன்றும்போதே எழுதிவிடுவோம்
பின்னரே பிற வேலைகள், தீர்மானித்தேன்.
வாகனத்தில் செல்கையில் வற்றல்
காயவைக்கையில்...
வந்துவிழுந்தன அற்புதவரிகள் மனத்திரையில்

வந்தவர்க்கெல்லாம் பதில் சொல்லி
வசதியோடு வந்தமர்ந்து வார்த்தைகள்
தேடுகையில்...
காற்றில் கரைந்த கற்பூரமானது
கணந்தோறும இதுவே வாடிக்கையானது...

தொலைபேசி தொல்லைகளில்
அலைபேசி அலைப்புகளில்
கேளிக்கைகள் தந்த பரபரப்பில்
சூழ்நிலைப் பின்னல்களில்...

சிக்குண்டு சிதறுகிறது காரிகையின்
கற்பனையும் விடாமுயற்சியும் - எனினும்
வெற்றிக்கரை கண்ணில் தோன்ற
விரைந்து செலுத்துகிறேன் லட்சியக் கப்பலை

– தனலெட்சுமி பாஸ்கரன்,
திருச்சி.

## சேற்றில் மறையுது...

ஊன்றிய பாதங்களில்
ஒட்டாமல் தப்பிக்கின்றது
உணவளித்த மண்
கான்கிரீட்டாய் மாறி...!

ஆதவனை விரட்டிவிட்டு
அன்றாடம் ஒளிருது இரவு
சோலார் விளக்குகளால்...!

உழைப்பவர்களுக்கு மட்டுமே
உறவாகிப் போனது
வியர்வை முத்துக்கள்...!

குளிரூட்டப்பட்ட அறைகளில்
ஆடை கசங்கா அதிகாரிகள்
உழைப்பைச் சுரண்டி சுகம்...!

செல்வப்பயனே ஈதல்
மறந்துபோன நாட்களில்
பகையானது உறவு...!

புண்பட பேசினும்
பணம்தான் வாழ்வென
தன்னலம் காக்குது நாடு...!

நிலம் பிரித்து
கடலுக்குள்ளும் கண்டோம்
பிரிவினை எல்லைகள்...!

நடிக்கச் சொல்லி
செயற்கையாய் புன்னகைத்து
சேற்றில் மறையுது வாழ்க்கை...!

– க. காயத்ரி,
புதுச்சேரி.



யார் சொல்வது சரியென்பது முக்கியமல்ல ; எது சரி என்பதே முக்கியம்.

# சிவாபிள்ளைக்கு "தமிழ்மொழி வித்தகர்" சிறப்புப் பட்டமளிப்புவிழா



இலண்டனில் கடந்த 40 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் திரு.க.சிவகுருநாதபிள்ளை அவர்கள் சமய, மொழி, கலாச்சார, பற்றுதல் அதிகம் கொண்டவராவார். அண்மையில் ஐரோப்பிய நாடுகளின் தேசிய பாடசாலைகளில் தமிழ் மொழியும் சமூக அந்தஸ்து உள்ள மொழியாக அங்கீகரிக்கப்பட்டு எமது பிள்ளைகளும், பிறநாட்டவரும் பயில்வதற்கு வழிசமைத்து விட்டிருப்பது இவரின் தனி மனித சாதனையாகும்.

அத்தோடு (EUROPEAN AWARD FOR LANGUAGUAGES 2007 - EAL) விருதும் பெற்றுள்ளார். இதனைக் கௌரவிக்கும் முகமாக 19-04-08 சனிக்கிழமை இலண்டன் GOLDSMITHS COLLEGE NEW CROSS அரங்க மண்டபத்திலே சிவபக்தசங்கம் (S.P.S.) சிவாபிள்ளைக்குப் பாராட்டுவிழா நடத்தினர். திரு. சிவகுருநாதபிள்ளை தம்பதிகள் சிவ.தம்பு தம்பதிகளால் மலர்மாலை சூடி அரங்கத்திற்கு வரவேற்கப்பட்டனர். மங்கயர்களின் மங்கள விளக்கேற்றலுடன் செல்விகள் தர்சனா தம்பு, யஸ்வினி தம்பு, வேதார விளக்கத்துடன் ஈழமக்களின் இன்னுயிர் ஈந்த உறவுகளுக்கு மௌன அஞ்சலியோடு தொகுப்பாளர் ஸ்ரீரங்கன் விழாவை தொடங்கி வைத்தார். டாக்டர். ரட்சணேஸ்வரன் தலைமை உரை வழங்கி விழாவை தலைமைதாங்கினார். வரவேற்புரையை எஸ்.பி.எஸ் சங்க தலைவர் சி. மயில்வாகனம் வழங்கினார். விழாவின் ஆசியுரையை இலண்டன் சிவன் ஆலய பிரதகுரு ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள் வழங்கினார். இவர்களின் மூலம் திரு.சிவாபிள்ளை அவர்களின் பன்முக ஆளுமை அறியக்கூடியதாய் அமைந்தது. இதனைத் தொடர்ந்து எஸ்.பி.எஸ் சங்கத்தின் செயலாளர் சிவ.தம்பு மற்றும் தலைவர் சி.மயில்வாகனம், அனைத்து தமிழ்பேசும் உறவுகளின் சார்பாக "தமிழ் மொழி வித்தகர்" எனும் சிறப்புப்பட்டம் வழங்கி கௌரவித்தனர். மங்களபதி வேல்முருகன் ஆலயத்தின் சார்பில் திரு.விநாயகமூர்த்தி முகுந்தன் சர்மா ஆகியோரும் சிவாபிள்ளையை கௌரவத்தனர். தொடர்ந்து, விழா நாயகரின் ஏற்புரை நடைபெற்றது. நிறைவாக நன்றியுரையை இலண்டன் சிவன் ஆலய செயலாளரும், ஸ்தாபகருமான திரு.க.வி.கணேசமூர்த்தி வழங்கினார். ■

## இலண்டனில் புத்தக வெளியீட்டு விழா...

கடந்த மார்ச் 1ம் தேதி லண்டன், ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் 'திருக்கோணமலைப் புலவர் வே. அகிலேசபிள்ளை நூற்றிரட்டு' என்ற நூலின் வெளியீட்டு விழா, சதுமலைக் கவிஞர் பாவலர் கந்தையா இராஜ மனோகரன் அவர்களின் தலைமயில் நடைபெற்றது. செல்வி அபிராமி இராஜமனோகரன் தமிழ் வாழ்த்துப் படியும் சபையோரின் வணக்கத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. சிவஸ்ரீகனகபாலகுமாரக் குருக்கள் தா. யோகநாதன் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன. என்.செல்வராஜா நூல் அறிமுகத்தை மேற்கொண்டார். இந்நிகழ்ச்சிக்காக ஜெர்மனியிலிருந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஸ்ரீ ஆறுமுக பஸ்கரக்குருக்கள், சிவத்தமிழ் ஆன்மிகக் காலாண்டு இதழின் உதவி ஆசிரியர் த. புவனேந்திரன் ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்தினர். ■



எவ்வித தியாகமும் செய்யாமல், எவ்வித நன்மையும் பெற முடியாது.

# சிரித்து வாழ வேண்டும்

திருமதி. கலாவிசு, புதுச்சேரி.

சிரிப்பு. இப்போதெல்லாம் வெறும் உதடுகளில் மட்டுமே! அதுவும் கூட பற்கள் தெரியாலாமா! தெரியக்கூடாதா? என்ற அவஸ்தையுடன். என்ன வாயிற்று நம் மனித இனத்திற்கு? மனம் திறந்த சிரிப்பினில் பல வியாதிகள் குறையும் என்கிறார்கள். "வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்பது பழமொழி. "சிரித்து சிரித்து என்னை சிறையிலிட்டாய்" என்பது ஒரு பாடல்.

சிரித்து விட்டால் ஏதோ உதவி கேட்டுவிடுவார்களோ என உறவுகளை பார்த்து சிரிக்க பயமாக இருக்கிறது. அனுசரனையாக இருந்து விட்டால், அடிக்கடி அல்லல் தருவார்களோ என அக்கம் பக்கம் வீட்டாரிடம் அச்சமாக இருக்கிறது. பல்லைக் காட்டி விட்டால் பட்டுப் புடவை கேட்டு பணத்திற்கு பத்தினி வேட்டு வைத்து விடுவாளோ என பதட்டமாக இருக்கிறது.

இப்படியே பதட்டமும் பயமுமாம் வாழ்க்கையாகி, பச்சிளங் குழந்தையிடம்கூடச் சிரிக்க மறந்து இவன் நல்லபடியாக வளர வேண்டுமே என கவலையில் கருத்தாய் இருக்கிறோம். பணம் என்ற மூன்றெழுத்து இன்று பல உறவுகளை கேள்விக் குறியாக்கி வைத்திருக்கிறது. கிராமங்களில் பாருங்கள். ஏறக்குறைய அனைவரும் விவசாயம், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு என அன்றாடக் காய்ச்சிகள்தான். ஆனால் அவர்களுக்குத்தான் எத்தனை அன்னியோன்யம். மாமா, மச்சான், அத்தை என உறவு சொல்லிக் கொண்டே, ஒருவருக்கு கஷ்டம் என்றால் ஊரே ஒன்று திரண்டு வருவது, பக்கத்து வீட்டில் ஒரு மரணம் என்றால் இவர்கள் பட்டினி கிடந்து அவர்களுக்காக சமைத்துப் போடுவது, ஊரில் திருவிழா மார்பில் சந்தனம் பூசிக் கொண்டு மகிழ்ச்சியாய் வலம் வந்து, ஊர்கூடித் தேர் இழுக்கும் ஒற்றுமை.

பட்டிணத்து பகட்டில், பாசம் தொலைந்து பந்தம் மறைந்து, பவிசாய் பணம் மட்டுமே பிரதானமாய் நிற்கிறது. மற்றவர்களுக்காக கண்ணீர் விடுவது என்பது தான் கஷ்டம். எல்லோரிடமும் இனிமையாய் இருப்பது எப்படி இயலாமல் போயிற்று நமக்கு? எல்லாவற்றையும் கணக்கு போட்டுப் பார்ப்பது என்பது எதனால் இங்கு கூடிப் போயிற்று? உறவுகளை கொச்சைப்படுத்தும்போது நம் உள்ளம் தன் அழகை இழந்துவிடுவதை நாம் எப்படி அறியாமல் போனோம்? மனைவியை மகிழ வைக்க முடியாதவன் மண்ணுலகில் வாழவே தகுதியில்லாதவன் அல்லவா? குழந்தைகளோடு குதுகலமாய் இருக்கத் தெரியாதவனுக்கு பெயர் மனிதன் என எப்படி சொல்வது?

பக்கத்து ஊருக்குத் தண்ணீர் விடவில்லை என மறியல் செய்யும் நமக்கு, பக்கத்து வயலுக்கு தண்ணீர் பாய்வதை தாங்கிக் கொள்ளும் சக்தி இருக்கிறதா? அன்டை நாட்டுக்காரன் படையெடுக்காமல் இருக்க ஆயுத ஒப்பந்தம் செய்து கொள்ள துடிக்கும் நாம், அக்கம்பக்க வீடுகளில் உள்ளவர்களிடம் அன்பை காட்டுகிறோமா?

அன்பு என்பது கொடுக்கக் கொடுக்க பெருகக் கூடியது அல்லவா? சிரிப்பு என்பது இதயத்தை வலுப்படுத்தி இருக்கின்ற இடத்தை இளமையாக மாற்றி விடும் தன்மை பெற்றதல்லவா? இறுக்கமாய் இருப்பதற்கு இல்லறம் எதற்கு? தாடி வளர்த்து காவி கட்டி எப்போதும் எங்கோ பார்த்தபடி திரிகின்ற சாமியாராகபோய் விடலாமே!

"துன்பம் வரும் வேளையில் சிரிங்க!" என்று சொல்லிவைத்தார் வள்ளுவர். இயலாத காரியம் தான். ஆனால் இனிமையாய் இருக்கும் காலங்களில் சிரிக்கலாமே? போராட்ட வாழ்க்கையில் காலமெல்லாம் கண்ணீரோடு வாழப் பழக்கப்பட்ட பெண்களே, பொம்பளை சிரிச்சா போச்சி என்ற பழமொழிகளை தூக்கி எறியுங்கள். அழகாய் சிரித்து, அறிவால் செறிந்து அன்பால் வாழ்ந்து பாருங்கள். அகிலம் உங்கள் பின்னே திரண்டு வரும். தொசாவாய் போற்றி மகிழும், சிரித்து வாழலாம் பிறர் சிரிக்கத்தான் வாழக்கூடாது. ■



# தமிழா சிலிர்த்தெழடா !

ஆறறிவு பெற்றஅருந்த தமிழனேநீ
அவனியிற்றான் பிறந்துதமிழுக் கென்ன செய்தாய்நீ?
பாரறிய பழம்பெருமை சாற்றுகின்றாய்
பண்பாட்டை மேல்காற்றில் தூற்றுகின்றாய்
சீரோடும் சிறப்போடும் திகழுமந்த
செம்மொழிக்கே இழுக்குவரல் கண்டுநீயும்
பாராத முகத்தோடு பவனிவந்தே
பழமையுறு இனம், மொழியைத் தவிக்கவிட்டாய்.



தொன்றுதொட்டு இலக்கியங்கள் இலக்கணங்கள்
தோற்றுவித்தே மகுடமிட்டார் உன்இனத்தார்
அன்றிங்கு நுழைந்திட்ட இந்திப்பேயை
அடித்துடனே விரட்டியதுன் மரபு அன்றோ?
இன்றிங்கே வடமொழியும் ஆங்கிலந்தான்
இடம்பிடிக்க வழிவிட்டே ஒதுங்கிநின்றாய்
வென்றிடுமுன் பேராற்றல் எங்கே? மாற்றான்
வீழ்கின்ற போர்ப்பரணி என்னவாச்சு?

அறங்காத்தும் அன்புதிர்த்தும் அரவணைத்தே
அரும்புலவோர் முச்சங்கம் அமரவைத்து
திறங்காட்டும் தீந்தமிழின் மாண்புயர்த்தி
தென்னாட்டுக் கலைவளர்த்த துன்இனம்தான்
உறங்குகிறாய் உன்பெருமை உணர்ந்திடாமல்
உயிர்மடியும் ஈழத்துத் தமிழனைப்பார்!
மறங்கொண்டே இனங்காக்க விழித்தெழுநீ
மாண்புறுநல் மொழிகாக்க சிலிர்த்தெழடா!

புலவர் ந. ஞானசேகரன்
திருலோக்கி.

கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. படைப்புகளைத் திருத்தவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

Owned & Publisher : T. Chandrasekaran, No.8, Vellala Street, Woraiyur, Trichirappalli-620 003. Printed by : R. Ravichandran at New Chitra Printers, No.5, Mission Hospital Road, Woraiyur, Trichirappalli - 620 003. Editor : T. Chandrasekaran



விழிப்பதற்கே உறக்கம் ; வெல்வதற்கே தோல்வி ; எழுவதற்கே வீழ்ச்சி.



ஓம் பதஞ்சலி தேவாய நம **Cell : 93626 55598**

# யோகா - தியானம்

## பயிற்சி வகுப்புகள்



# ருத்ர சாந்தி யோகாலயம்

**குருஜீ. யோகரத்னா R.P.கிருஷ்ணகுமார்**

பயிற்சி நேரம் : தினசரி காலை 6.00 முதல் 8.00 வரை - மாலை 5.00 முதல் 7.00 வரை

மரிய பிரஜேஸ் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், சாஸ்திரி ரோடு, சிப்பி தியேட்டர் அருகில், சாரதாம்பாள் கோவில் பின்புறம், தென்னூர், திருச்சி-17.



# SLN கேட்டரிங் ஸ்கூல்

நெ.13, சாரதாம்பாள் கோவில் பின்புறம், சாஸ்திரி ரோடு,
சிப்பி தியேட்டர் அருகில், தென்னூர், திருச்சி - 17.
Ph : 0431 - 6459855 Cell : 92444 - 25707

## F & B Service & F&B Food Production



புதுக்கோட்டை ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் டிரஸ்ட் மற்றும் அரசு உதவி தொகை கொண்டு SC / ST மாணவ மாணவியர்களுக்கு எங்களது பள்ளிகளில் **முற்றிலும் இலவசமாக** கேட்டரிங் பயிற்சிக்கு 2008 - 2009க்கான அட்மிஷன் நடைபெறுகிறது.

- OC, MBC, BC பிரிவு மாணவ மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் **(Rs. 13,000/-)** மட்டுமே வசூலிக்கப்படும்.
- பஸ் பாஸ், ரயில் பாஸ் வழங்கப்படும்.
- உடனடி வேலைவாய்ப்பு வழங்கப்படும். (தமிழ்நாடு மற்றும் இதர மாநிலங்களில்)
- புத்தகம் மற்றும் அடையாள அட்டை இலவசமாக வழங்கப்படும்.
- கல்வித் தகுதி 10th தேறிய / தவறிய மற்றும் + 2. அதற்கு மேலும்.

Licence Regd. No. SS Postal/TR-DN/27/2006-08/TR (INDIA) May 2008
Regd.No. SS Postal/TR/DN/28/2006-08/TR (Foreign)
"INIYA NANDAVANAM" TAMIL MONTHLY RNI No. TNTAM - 14613/2002

